©
தமிழ்நாடு அரசு
2024

பதிவு எண்.71

மதுரை மாவட்ட அரசிதழ்

சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

மதுரை, நவம்பர் 25, 2024
கார்த்திகை 10, குரோதி, திருவள்ளுவர் ஆண்டு–2055
[எண். 15

பொது அறிவிக்கை

ந.க.எண்.ஆர்1/e51270/2024 நாள்: 22/11/2024

மதுரை மாநகராட்சி

2024-2025 முதல் 2026-2027 முடிய

இணையவழி (Online) டெண்டர்/பொது ஏல அறிவிப்பு

(ந.க.எண். எ1/011217/2024)

மதுரை மாநகராட்சி 2024-2025 முதல் 2026-2027-ஆம் வருடத்திற்குப் பல்வேறு உரிமங்களுக்கு குத்தகை உரிமத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட டெண்டர் / பொது ஏல அறிவிப்பு இதனால் சகலருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள். 25.05.2009-ன்படி 2024-2025 முதல் 2026-2027-ஆம் ஆண்டு உரிமம் வழங்க தினசரி செய்தித்தாளில் அறிவிப்பு செய்து பொது டெண்டர் / ஏலம் நடைபெறும். ஏலம் போகாத இனங்களுக்கு மறு ஏலம் ஆணையாளர் அவர்களால் குறிப்பிட்ட தேதியன்று நடைபெறும். 2024-2025 ஆம் வருடத்திய உரிமங்களுக்கு டெண்டர் / ஏலம் அரசாணை(2ப) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள். 06.08.2024-ன்படி இணையவழி(Online) வாயிலாக நடைபெறும்.

பொது நிபந்தனைகள்

1. எல்லா ஏலங்களும் கீழ்க்கண்ட பொது நிபந்தனைகளுக்கும் மற்றும் எல்லா ஏல சிறப்பு நிபந்தனைகளுக்கும், தற்பொழுது 1998-ம் வருட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்படியும், (By Law) நிபந்தனைகளுக்கும் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அரசு ஆணை, ஆணையாளர் மற்றும் மாமன்றம் உத்திரவுகளுக்கும் உட்பட்டதாகும். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் மாநகராட்சியின் விதிகளுக்கு கட்டுப்பட்டவராக நடந்து கொள்ள வேண்டும்.

2. அனைத்து ஏல இனங்களுக்கும் எதிர்பாராமல் ஏற்படும் கலகம், தீ விபத்து, தடுக்க முடியாத தொற்று நோய் பரவுதல், எதிர்பாராத பேரிடர் காலங்களில் தற்காலிகமாக மாநகராட்சி குத்தகை இனங்களை மூடச்செய்வதற்கு ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அப்பேர்ப்பட்ட காலத்திற்கு உரிமதாரருக்கு யாதொரு இழப்பீடும், நஷ்டஈடும் மாநகராட்சியால் வழங்க இயலாது.

3. டெண்டர் / ஏலம் இணையவழி(Online) கோருபவர்கள் பதிவுக்கட்டணம் ரூ.1000/- இணையவழி(Online) வாயிலாக செலுத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் பதிவுக்கட்டணம் திரும்ப வழங்கப்படமாட்டாது.

4. ஏலம்/டெண்டர் முடிந்து உயர்ந்தபட்ச ஏல கேள்விதாரர் உரிமத் தொகையுடன் GST/IT தொகை முழுவதையும் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் ஏற்கனவே செலுத்திய முன்பணம் திரும்ப வழங்கப்படாமல் பறிமுதல் செய்யப்படும். மறு ஏலம் விடுவதால் ஏற்படும் சகல இழப்பீட்டிற்கும் ஏலதாரர் பொறுப்பாவார்.

5. ஏலம்/டெண்டர் முழுவதும் இணைய வழி(Online) வாயிலாகதான் நடைபெறும்.

6. ஏலம்/டெண்டர் இணைவழி வாயிலாக கலந்து கொள்ள பதிவு கட்டணம், ஏல மதிப்பு தொகை மற்றும் தொகை செலுத்திய பின்னர்தான் வரிபாக்கியில்லா சான்று பெற்று கலந்து கொள்ள வேண்டும்.

7. நிபந்தனையில் கண்ட உறுதிமொழியை குறிப்பிட்ட ஏலம் ஒரு நபருக்கு உரிய அனுமதி பெற்று உறுதி செய்வதற்கு முன் ரூ.100/- மதிப்புள்ள முத்திரைக் காகிதத்தில் முச்சாலிக்கா ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். அதன் பின்னர் தான் உரிமதாரர் உரிமையை அனுபவிக்க அனுமதிக்கப்படுவார்.

8. ஏலத்தில் எந்த இனத்தை ஏலம் எடுக்கப்படுகிறதோ அதே இனத்தில் என்ன தொழில் வியாபாரம் செய்யப்போகிறார் என்பதை குறிப்பிட்டும், கூட்டாக தொழில் செய்ய விரும்பினால், யாருடன் கூட்டு என்ற விபரத்தை கூட்டாக எழுத்து மூலம் எழுதி தரப்படவேண்டும். மேலும் கூட்டு வியாபாரத்திலிருந்து கூட்டாளி விலகினால் அதன் விபரத்தையும் தெரியப்படுத்த வேண்டும். மாற்று வியாபாரம் செய்யக்கூடாது. அவ்வாறு தொழில் மாற்றம் செய்தால் உரிமம் எவ்வித அறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

9. யாராவது ஏற்கனவே ஏலம் எடுத்து உரிமதாரர் கட்டுப்பாட்டுக்கு மாறாக நடந்து இருந்தாலும் அல்லது கட்டுப்பாடுகளை நிறைவேற்றத் தவறியிருந்தாலும் அல்லது தனக்குப்பயன்படும் வகையில் மறைமுகமாக வேறொரு நபரை பினாமி ஏலம் எடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரியவந்தாலும் அல்லது வேறு எந்தவித காரணத்தாலும் அவர் மறுபடியும் மாநகராட்சி ஒப்பந்தக்காரராக இருப்பது விரும்பத்தக்கது அல்ல என்று முடிவு செய்து அவரையும் அவரை சார்ந்தவர்களையும் ஏலம் கேட்க அனுமதிக்காமலிருக்க ஏலம் நடத்துகிறவருக்கு அதிகாரம் உண்டு. அவ்விதம் செய்வதற்கு காரணம் சொல்லப்படமாட்டாது. மேற்கண்ட நபரை வேறு யாருக்காவது முகவராகவும் அனுமதிக்கப்படமாட்டாது. இது சம்மந்தமாக ஏலம் நடத்துபவருடைய தீர்ப்பே முடிவானது. வேறு எல்லா நிபந்தனைகளைப் போல் இந்த நிபந்தனைக்கும் உட்பட்டுத்தான் அவர்கள் ஏலத்தில் கலந்து கொள்வதாகக் கருதப்படுவார்கள்.

10. மாநகராட்சிக்கு இன்றைய தேதியில் செலுத்த வேண்டிய உரிம தொகை, நடப்பு மாதம் முடிய(ஏலம் நடைபெறும் நாளுக்கு முந்தைய மாதம் முடிய) எல்லாவிதமான வரிபாக்கிகள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புப்படியான பாக்கிகள் ஏதேனும் செலுத்தப்படாமலிருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். பாக்கிகள் இல்லையென்பதற்கான சான்றுகள் அலுவலகத்தில் பெற்று தாக்கல் செய்ய வேண்டும். தவறினால் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

11. ஏலம் நடக்கும் நேரத்தில் ஏல அறிவிப்பில் கண்ட எந்த நிபந்தனைகளையும் மாற்றவோ அல்லது எடுத்துவிடவோ அல்லது புதிய நிபந்தனைகளை சேர்க்கவோ ஆணையாளரோ அல்லது ஏலம் நடத்தும் அலுவலரோ விரும்பினால் ஏலத்தை நிறுத்தி வைக்க அதிகாரம் உண்டு.

12. ஆணையாளர் அல்லது ஏலம் நடத்துபவர் முடிவுப்படி ஏலம் முன்பின் நடத்தப்படும்.
பொதுவாக டெண்டர் / ஏலத்தில் உயர்ந்த தொகைக்கு கேட்கிறவர்களுக்கு ஏலம் உறுதி செய்யப்படும். ஆனால் உயர்ந்த தொகையை பரிசீலனை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுடன் ஆணையாளருக்கு யாதொரு காரணமும் சொல்லாமல் எந்த கேள்வியும் ஒப்புக் கொள்ளவோ அல்லது ஒப்புக் கொள்ள மறுக்கவோ அல்லது மறு ஏலம் நடத்தவோ பூரண அதிகாரம் உண்டு.

13. மறு ஏலம் விரும்புவோர் அதே இனத்திற்காக முந்தைய ஏலத்தில் கலந்து கொண்டவராக இருக்கக்கூடாது. மறு ஏலம் கேட்பவர் சென்ற ஏலத்தில் கோரியுள்ள தொகைக்கும் மேல் 25% குறையாமல் உயர்வு செய்து கேட்டு மேற்படி மொத்த முழுக்கேள்வித் தொகையை டெபாசிட்டாக செலுத்தி அந்த தொகைக்கான ரசீதுடன் சேர்த்து மனுவை ஆணையாளர் அவர்களிடம் ஏலத்தேதி நீங்கலாக 24 மணி நேரத்திற்குள் அடுத்த அலுவலக நாளில் மாலை 6 மணிக்குள் (வரிபாக்கியில்லா சான்று, புகைப்படம் -2, ஆதார் நகல், Smartcard நகல், Pancard நகல்) சமர்ப்பிக்கப்படவேண்டும். (இதில் விடுமுறை சேராது)

14. ஆணையாளரவர்கள் குறிப்பிடும் ஒரு தேதிக்கு ஏலத்தை தள்ளிவைப்பதற்கு அதிகாரம் உண்டு. அவ்விதம் செய்வதில் அன்றைய தினம் எவரொருவர் அதிகத் தொகைக்கு ஏலம் கேட்கிறாரோ அந்த தொகையானது ஏலம் மாற்றி வைக்கப்பட்டிருக்கும் தேதிகளிலும் அமுலிலிருக்கும்.

15. எல்லா ஏலங்களும் மாமன்றம் அல்லது ஆணையாளர் ஆகியோர்களின் யாருடைய அதிகார வரம்பிற்குட்பட்டு இருக்கிறதோ அவர்களின் உறுதிக்குட்பட்டதாகும்.

16. டெண்டர் ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்டவரின் தொகையையும் இரண்டாவதாக உயர்ந்த பட்ச கேள்வி கோரிய இருவர்களின் தொகையினை தவிர மற்றவர்களின் தொகை ஏலம் முடிந்தவுடன் அவ்விடத்திலே திருப்பிக் கொடுக்கப்படும்.

17. மறு ஏலம் நடத்தப்பட்டால் ஒவ்வொரு ஏலத்திலும் உச்சக் கேள்வி கேட்டவரின் உயர்ந்தபட்ச ஏல இறுதி முடிவு தெரிந்தபிறகே டிமாண்ட் டிராப்ட் திரும்பத் தரப்படும்.

18. டெண்டர் / ஏலம் எடுத்தவர்கள் உயர்ந்த ஏலத்தொகையினை முழுவதையும் ஒரே தவணையில் செலுத்த வேண்டும். அதன்பின்தான் அனுமதி உத்திரவு வழங்கப்படும். ஏலம் உறுதியான உடன் ஆணையாளர் குறிப்பிடும் நிபந்தனைகளின்படியும் ரூ.100/- மதிப்புள்ள முத்திரை பத்திரத்தில் எழுதி ஏலம் எடுத்தவர் செலவில் கொடுக்க வேண்டும். தவறும்பட்சத்தில் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

19. ஏலம்/டெண்டரில் உயர்ந்தபட்ச ஏல கேள்வி கோரியவர் ஏலம் எடுக்கப்படும் தொகையில் இரண்டு வருடத்திற்கான உரிம தொகையினை பாதுகாப்பு வைப்பு தொகை தொகையாக செலுத்தப்பட வேண்டும்.

20. செலுத்தப்பட வேண்டிய யாதொரு மாதந்திர உரிம தவணைத் தொகையும் அது செலுத்தப்படும் தேதி வரையிலுள்ள அபராத தொகையையும் சாதாரணமாகக் கேட்டாலும் கேட்கப்படாவிட்டாலும் உரிமதாரரால் செலுத்தப்பட வேண்டிய தொகையாகும். தவணை கட்டத்தவற ஆரம்பித்த அந்த மாதம் 5ம் தேதிக்குள் தவணைத் தொகையுடன் அபராதமும் சேர்த்துக் கட்ட தவறினால் எவ்வித முன் அறிவிப்புமின்றி உரிமம் ரத்து செய்யவும், அலுவலகம் மூலம் நடத்தவும் தடையாக இருந்தால் பூட்டிப் பொறுப்பு எடுக்கவும் அல்லது மறு ஏலம் போட உத்தரவு இடவும் ஆணையாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. எந்தக் காரணத்தைக் கொண்டும் உரிம காலத்தில் மறு ஏலம் போடும்படியாக நேர்ந்து அதில் பொருள் லாபம் கிடைத்தால் உரிமதாரருக்கு உரிமை கிடையாது. மாறாக மாநகராட்சிக்கு கணக்குப் பிரகாரம் ஏற்படும் எல்லா இழப்பிற்கும் உரிமதாரர் கட்டுப்பட்டவராவார்.

21. எவ்வித காரணத்தைக் கொண்டும் உரிமம் எடுத்தவர் வேறு நபருக்கு யாதொரு உரிமையை மாற்றவோ அல்லது உள் குத்தகைக்கு விடவோ கூடாது. மீறினால் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் கிரிமினல் நடவடிக்கை உள்பட இதர சட்டப்படி ஏற்பட்ட எல்லா நடவடிக்கைகளும் உரிமைதாரர் பேரிலும் உள்குத்தகை ஒப்புக் கொண்டவர் பேரிலும் எடுக்கப்படும்.

22. ஆணையாளர் அவர்களின் உத்தரவு இல்லாமல் மாநகராட்சிக்கு சொந்தமான இடம், கட்டிடம் போன்றவற்றில் நிரந்தரமாகவாவது அல்லது தற்காலிகமாகவாவது எவ்விதமான சீர்திருத்தங்களோ, மாறுதல்களோ, கட்டிடங்களோ (சுவர்களோ) உரிமதாரர் கண்டிப்பாக கட்டவோ அல்லது கட்ட அனுமதிக்கவோ கூடாது. அதைப்போல் உரிமத்திற்கு உட்பட்ட இடத்தைத் தவிர வேறு எந்தவிதத்திலும் எந்த இடத்திலும் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் கண்டிப்பாக செய்யக்கூடாது. அப்படி மீறி செய்தால் மாநகராட்சி சொத்துக்களில் அத்துமீறிப் பிரவேசித்ததாக (Unauthorised Occupation) கருதி சட்டப்படி உள்ள எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

23. ஆணையாளர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட இடவாடகை கடைகள் அமைந்துள்ள இடங்கள் பொதுமக்களால் மற்றும் காவல் துறையினரால் ஆட்சேபணை ஏற்படும் பட்சத்தில் மேற்படி இடவாடகை கடைகளை வேறு இடங்களுக்கு மாற்ற ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

24. உரிமதாரருக்கு விடப்பட்ட கட்டிடத்தில் தேவையான குடிதண்ணீர் குழாய் இணைப்போ மின்சார இணைப்போ அல்லது அதனுடைய விஸ்தரிப்போ அல்லது அது சம்பந்தமான வேறு அதிகப்படியான ஏற்பாட்டிற்கோ உரிமதாரர் ஆணையாளருக்கு மனுச் செய்து கொள்ளவேண்டும். அதற்கு ஆணையாளர் தன் உசிதம் போல அனுமதி கொடுப்பார். ஆணையாளர் விதிக்கும் நிபந்தனைகளின் பேரிலும், கீழே குறிப்பிட்டிருப்பவைகளுக்குட்பட்டும் மாநகராட்சியாலேயே அதற்கான வேலையை செய்து கொடுக்கப்படும். வேலையின் செலவையும் அவைகளுக்குரிய கட்டணங்களையும் எப்பொழுதும் உரிமதாரர் ஏற்றுக் கொள்ள வேண்டும். மின்சார கட்டணங்களையும் எப்பொழுதும் உரிமதாரர் ஏற்றுக் கொள்ள வேண்டும். மின்சார இணைப்புக்களும் அமைப்புகளும் கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள இதர மின்சார சாதனங்களும் குழாய் இணைப்புகளும் மாநகராட்சியின் சொத்தாகவே இருக்கும். தேவையான டெபாசிட் தொகைகளும் மின்சார செலவும் செலுத்தப்படவேண்டிய இதர தொகைகளும் அவ்வப்போது ஆணையாளர் கேட்கும் போது அதன்படி உரிமதாரர் செலுத்த வேண்டும். உரிமதாரர் ஆணையாளர் பெயருக்கும் தனியாக மின்சார இணைப்பு பெற்றுக் கொள்ள ஆணையாளர் முன் அனுமதி பெற வேண்டும். உரிமதாரர் உபயோகிக்கும் மின்சாரம் மற்றும் தண்ணீருக்குரிய கட்டணங்கள் அவரே செலுத்த வேண்டும். இதனால் ஏற்படும் சகல கட்டணங்களையும் ஏற்கும் பொறுப்பு அவரைச் சார்ந்ததாகும். மாநகராட்சி பொறுப்பு அல்ல. சாலை ஓரே பெட்டிக்கடைகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட மாட்டாது.

உரிம தொகை செலுத்தாமல் இருந்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி குடிதண்ணீர், மின் இணைப்பு, சாக்கடை மற்ற வசதிகளை உடனடியாக துண்டிக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு.தற்போது மின் இணைப்பு உள்ள மார்க்கெட்டிற்கு தனியாக உரிமதாரர் மின் இணைப்பு பெற்றுக் கொள்ள வேண்டியது. அதற்குரிய மின் துய்ப்பு கட்டணத்தை உரிமதாரர் செலுத்த கடமைப்பட்டவர் ஆவார்.

உரிம (licence) காலம் முடிந்தவுடன் உரிமதாரர் காலிசெய்யவில்லையானால் குடிதண்ணீர், மின்சாரம், சாக்கடை மற்ற வசதிகளை உடனடியாக துண்டிக்க ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. உரிம ஸ்தலம் மாநகராட்சியால் எடுத்துக்கொள்ளப்படும்.அந்த ஸ்தலத்திற்கோ அங்குள்ள பொருட்களுக்கோ உரிமதாரர் எவ்வித உரிமையும் கோர இயலாது.

25. பொதுவாகவும் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் படியும் ஆணையாளர் உத்திரவிடுகிற பிரகாரம் உரிமம் இடத்தை தன் சொந்த செலவில் உரிமதாரர் சுத்தமாகவும் சுகாதார முறையிலும் வைத்துக் கொள்ள வேண்டும். மாநகராட்சியிலிருந்து நியமிக்கப்பட்ட ஏற்கனவே உள்ள பணியாளர்கள் நீங்கலாக அவசியமேற்பட்டால் உரிமதாரரின் பொறுப்பில் தேவையான பணியாளர்களை நியமிக்க வேலை வாங்கிக் கொள்ள ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. அவ்விதம் ஏற்படும் செலவுகளை உரிமதாரர் எவ்வித மறுப்பும் இல்லாமல் மாநகராட்சி கணக்குப்படி செலுத்தக் கட்டுப்பட்டவராவார். பணியாளர்கள் நியமிப்பது ஆணையாளரின் முடிவுக்கு உட்பட்டதாகும்.

26. உரிமத்திற்கு விடப்பட்ட சொத்தை அனுபவிக்க கூடாதென்று ஏல நிபந்தனைகளின்படி எடுக்கப்பட்ட தகுந்த காரணங்களுக்காக ஆணையாளரால் உத்திரவு இடப்பட்டாலோ, அல்லது உரிம காலம் முடிவடைந்த உடனே மேற்படி உரிமத்திற்கு விடப்பட்ட சொத்தை நல்லமுறையிலும் எந்தவிதமான சேதமும் இல்லாமல் எந்தவிதமான சாக்குப்போக்கும் சொல்லாமல் உரிமதாரர் திரும்ப ஆணையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

உரிம காலம் முடிவடைந்த உடன் காலிசெய்து கொடுக்கும்படி முன்கூட்டியே ஆணையாளரிடமிருந்து உத்திரவு எதுவும் வரவில்லை என்பது போன்ற ஏதாவது காரணத்தைக் கூறிக்கொண்டு காலி செய்ய முடியாது என்றோ கூறமுடியாது. மீறி நடப்பவர்களை எவ்வித முன் அறிவிப்பும் இன்றி பலவந்தமாக அப்புறப்படுத்துவதுடன் கிரிமினல் நடவடிக்கை மற்றும் சட்டப்படியான இதர எல்லா நடவடிக்கைகளும் அவர்களின் மீது எடுக்கப்படும். இது சம்மந்தமாக ஆணையாளரால் எடுக்கப்படும் எந்த நடவடிக்கைக்கும் இழப்பீடு எதுவும் கொடுக்கப்படமாட்டாது. மேற்ச்சொன்ன காரணங்களால் உரிமதாரர் அதை மறுக்கவோ அல்லது நீதிமன்றத்தில் அது சம்பந்தமாக வழக்கு தொடரவோ உரிமையில்லை.இந்த டெண்டர் ஏல அறிவிப்பு சம்மந்தப்பட்ட இனங்கள் அனைத்தும் உரிமத்துக்கு விடப்பட்டதாக கருதப்படும். ஆகையால் உரிமதாரருக்கும் உரிமம் (Licence) மட்டுமே உண்டு. சொந்த உரிமையோ (Licence combined with interest) அல்லது குத்தகை போன்ற உரிமையோ உரிமதாரருக்கு கிடையாது. தவிர எந்த நிலையிலும் தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை) கட்டுப்பாடு சட்டத்தின் விதிகள் உரிமதாரர்களுக்கு எந்தவிதத்திலும், எந்த நிலையிலும் பொருந்தவே பொருந்தாது.

27. அனைத்து உரிம இனங்களின் உரிம கட்டண விவரங்களை தெளிவாக, நீல நிற அறிவிப்புப்பலகையில் வெள்ளை நிற எழுத்துக்களில் எழுதி வைக்க வேண்டும். பலகை குறைந்தது 5’x3’ அடி அளவிலும் எழுத்துக்கள் குறைந்தது 5 inch அளவிலும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பலகையை தற்காலிக அல்லது நிரந்தர மறைப்புகள் கொண்டு மூடக்கூடாது. திடீர் ஆய்வின் போது அவ்வாறு கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்படும். மேற்படி நிபந்தனையின்படி நடக்கத் தவறியவர் மீது முதல் தடவை மாநகராட்சி ஏல மதிப்பு தொகையில் 10% அபராதமாக விதிக்கப்படும். மீண்டும் இரண்டாவது முறையும் தவறு செய்தால் ரத்து செய்யப்படுவதுடன் மேற்படி உரிமதாரர் கருப்புப் பட்டியலிலும் சேர்க்கப்படுவார்.

28. உரிமதாரர் இனத்திற்கு உத்தரவு கிடைத்த 10 தினங்களுக்குள் வசூல் செய்ய வேண்டிய கட்டண விகிதத்திற்குரிய பலகை வைக்க வேண்டும். தவறினால், மாநகராட்சியே மேற்படி பலகைகளை வைத்து விட்டு, அதற்குரிய செலவு தொகையை இரண்டு மடங்காக உரிமைதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

29. உரிமதாரர் கட்டணம் வசூல் செய்யும்பொழுது ஒவ்வொரு ரசீதிலும் உரிமதாரராவது அல்லது அவருடைய முகவராவது தேதியுடன் கையெழுத்திட்டு அச்சு ரசீது அலுவலக முத்திரையுடன் கொடுத்து விகிதப்படி ஏற்பட்ட கட்டணத்தை வசூல் செய்ய வேண்டும். தினசரி வசூல் செய்வதற்குச் சரியான கணக்கு வைத்திருக்க வேண்டும். ரசீதின் அடிக்கட்டைகளையும், கணக்குகளையும் ஆணையாளரவர்கள் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர் கேட்கும் போது கொடுக்கவேண்டும். ரசீது புத்தகங்களில் உள்ள ரசீதுகளுக்கும் நம்பர் 1ல் ஆரம்பித்து தொடர்ச்சியாக உரிமகாலம் முடியும் வரையில் நம்பர் கொடுக்கப்படவேண்டும். புத்தகங்களை அலுவலக முத்திரை பெறுவதற்கு முன்னதாக மாநகராட்சி அலுவலகத்தில் அதற்கு என்று ஏற்பட்ட பதிவேட்டில் பதிவு செய்து கொடுக்க வேண்டும். ரசீது புத்தகங்களுக்கு உரிமதாரரால் கணக்குள் வைக்கப்படவேண்டும்.

30. உரிமதாரர் மேற்படி உரிம காலத்தில் அரசுக்கும், மாநகராட்சிக்கும் ஏற்கனவே நிர்ணயித்திருக்கிறபடி கொடுக்க வேண்டியதும் இனி ஏற்படுவதுமான எல்லா வரிகளையும் முன்னமே செலுத்தும்படி ஆணையாளர் உத்திரவு செய்தால் அவ்விதமே செலுத்த கட்டுப்பட்டவராவார்.

31. எல்லா உரிமங்களும் ஆணையாளர் அல்லது அன்னாரின் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் பணியாளர்கள் ஆகியவர்களின் கட்டுப்பாட்டின் கீழும் மேற்பார்வையிலும் இருந்து வரும் நிர்வாகத்தின் அவசியத்தை முன்னிட்டு அவ்வப்போது கொடுக்கும் உத்திரவுகளின்படி உரிமதாரர் நடத்தி வரவேண்டும்.

32. உரிம பத்திரத்தில் சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்கும் முரணாக நடப்பதால் ஏற்படும் குற்றங்களுக்கும் பொறுப்புகளுக்கும் ஏலம் ஒப்புக் கொண்டவர் அவருடைய வாரிசுகள் முகவர்கள் மற்றும் சிப்பந்திகள் ஆகிய அனைவரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாவார்கள்.

33. உரிம காலத்திற்குள் உரிமதாரர் இறந்தாலும், அல்லது புத்திசுவாதினம் இழந்து விட்டாலும் அல்லது வேறு காரணங்களால் உரிமம் நடத்த முடியாதவராய் போனாலும் மேற்படி உரிம அனுபவித்துக் கொள்ளும் உரிமம் முடிந்துவிடுவதால் உடனடியாக மாநகராட்சியிடம் பொறுப்பு ஒப்படைக்க வேண்டும். ஆனால் மேற்படி உரிமதாரரின் எக்ஸிகியூட்டர்கள் அல்லது வாரிசுகள் மேற்படி உரிமம் முடியும்வரை அதே நிபந்தனைகளுடன் விருப்பத்தின் பேரில் நடத்த ஆணையாளரின் உத்திரவு பெற்று அவர்கள் நடத்தி வரலாம். அவ்வாறு விருப்பம் இல்லை எனில் உரிம இனத்தை மறு ஏலம் விடப்படும்.

34. உரிமதாரர் பொது நிபந்தனைகளின்படியாவது அல்லது இதில் கண்ட சிறப்பு நிபந்தனைகளின்படியாவது நடக்கத் தவறினால் ஆணையாளர் அவர்களால்

அ) உரிமம் ரத்து செய்து உரிமதாரர் பொறுப்பிலும் அதை மறு ஏலம் போடவோ அல்லது இலாகா மூலமாய் நடத்தவோ செய்யலாம், அதனால் ஏற்படும் இழப்புகளுக்கும், சேதங்களுக்கும். உரிமதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.

ஆ) ஏல மதிப்பு தொகையில் 10%க்கு குறையாமலும் முதல் அபராதத்திற்கும் பின்னும் மேற்படி குற்றம் நீடிக்குமானால் ஒவ்வொரு குற்றத்திற்கும் அபராதத் தொகை இரட்டிப்பாக விதிக்க ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. மேலும் குற்றம் நீடிக்குமானால் உரிமம் ரத்து செய்வதுடன் "பிளாக் லிஸ்ட்" செய்யப்படும். மாநகராட்சி ஏலங்களில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.

இ) அப்படி உரிமத்தை ரத்து செய்தாலும் அது மற்ற நிபந்தனைகளின் தவறுதலுக்காக ஆணையாளருக்கு நடவடிக்கை எடுக்க இருக்கும் அதிகாரத்திற்கு பாதகமாய் இருக்காது.

35. உரிமத்திற்கு விடப்பட்டிருக்கும் மாநகராட்சி இடத்திற்கு உரிம காலத்தில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அல்லது மேற்படி உரிம காலம் முடிந்து அல்லது வேறு காரணத்திற்காக மாநகராட்சிக்கு திரும்ப ஒப்படைக்கும் போது அல்லது மாநகராட்சி பொறுப்பு எடுத்துக் கொள்ளும் போது மேற்படி சொத்தில் ஏதாவது சேதம் ஏற்பட்டிருந்தால், அவ்விதம் ஏற்படும் இழப்பிற்கு ஆணையாளர் கோரும் தொகையை கொடுப்பதற்கு உரிமதாரர் கட்டுப்பட்டவராவார். இவ்விஷயத்தில் ஆணையாளரின் தீர்ப்பே முடிவானது. உரிமதாரர்கள் இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு உரிமை கிடையாது.

36. ஆணையாளர் விதிக்கும் அபராதத்தின் பொருட்டு உரிமதாரர் டெபாசிட் செய்திருக்கும் முழுத் தொகையாவது அல்லது அதில் ஒரு பாகத்தையாவது ஆணையாளர் அவர்கள் வரவு வைத்துக் கொள்ளலாம்.

37. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 116,116A-ன் மற்றும் தமிழ்நாடு வருவாய் மீட்பு சட்டம் 1864 விதிகளின் கீழ் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்

38. மேலும் இந்த அறிவிப்பிலும் ஒப்பந்தப் பத்திரத்திலும் உள்ள வாக்கியங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் ஆணையாளரின் விளக்கமே முடிவானது என்பதை உரிமதாரர் தெரிந்து அதன்படி ஒப்புக் கொள்ளவும் அதன்படி நடந்து கொள்ளவும் கட்டுப்பட்டவராவார்.

39. ஒரு முறை செலுத்தப்பட்ட ஏலத்தொகை எக்காரணம் கொண்டும் எந்த சூழ்நிலையிலும் திரும்ப தரவோ அல்லது வஜா செய்யப்படவோமாட்டாது.

40. எந்த சமயத்திலும் அவசியமாகத் தோன்றினால் ஆணையாளர் பொது நலத்தின் பொருட்டு உரிமத்தை நிறுத்திவிட விருப்பப்பட்டால் உரிமதாராருக்கு எழுத்து மூலமாக அறிவிப்பு அனுப்பி ரத்து செய்ய அதிகாரம் உண்டு. அதுவரையில் உரிமதாரர் நடந்திருக்கும் தவறுதலுக்காக ஆணையாளருக்கும் நடவடிக்கை எடுக்க அதிகாரம் உண்டு. பாதகமண்ணில் இப்படி செய்யப்பட்ட உரிமதாரர் உரிமத்திற்காக முன்பணமாகக்கட்டியுள்ள உரிம தொகையில் அவருக்கு விகிதப்படி (Proportionate) ஏற்படும் தொகையை திருப்பிக் கொடுப்பதைக் தவிர வேறு எவ்வித இழப்பீடும் கொடுக்கப்படமாட்டாது. மேற்சொல்லப்பட்டவைகளில் ஆணையாளரின் தீர்ப்பே முடிவானது.

41. உரிம காலத்தில் நடத்தப்படும் ஏலங்களில் ஏலம் எடுத்தவரால் ஏற்படக்கூடிய தவறுதலின்றி நிர்வாக காரணங்களால் ஏலம் நடத்தப்பட்ட தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் ஏலத்தின் பொறுப்பை ஒப்படைக்க முடியாது போனால், அவ்வாறு ஏற்படக்கூடிய காலதாமதத்திற்கு மேற்கண்ட பதினைந்து தினங்களையும் சேர்த்து விகிதாச்சார அடிப்படையில் (Proportionate) உரிம தொகை திரும்ப வழங்கவோ அல்லது குறைத்து பெறவோ ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. 15 தினங்களுக்குள் உத்திரவு வழங்கப்பட்டால் எவ்வித தள்ளுபடியும் வழங்கப்படமாட்டாது. மேற்கண்டவற்றில் ஆணையாளர் அவர்களின் தீர்ப்பே முடிவானது.

42. ஆணையாளரால் எந்த வியாபாரம் குறிப்பிடப்படுகிறதோ அந்த வியாபாரம் மட்டும் தான் அந்த கடையில் அனுமதிக்கப்பட வேண்டும். தவிர இதர வியாபாரங்கள் அல்லது குடியிருப்பு மற்றும் இதர உபயோகங்களுக்காகக் கடையை உபயோகிக்கக் கூடாது. வியாபாரம் செய்பவர் பிரஸ்தாப வியாபாரம் சரிவர நடக்கவில்லை என்ற காரணத்தால் வேறு வியாபாரம் மாற்றி செய்ய வேண்டுமென்று கருதினால் ஆணையாளரிடம் முன் அனுமதி பெற வேண்டும். வியாபாரத்தை மாற்றிக் கொள்ள அனுமதிக்கவோ, நிராகரிக்கவோ ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. அனுமதி அளிக்கும் பட்சத்தில் ஏற்கனவே உள்ள உரிமத்தொகையுடன் 50% உயர்த்த ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

43. மாநகராட்சிக் கடைகள் மார்கெட்டுகளில் உரிமத்திற்கு உட்பட்ட இதர இடங்களில் ஆணையாளரின் முன் அனுமதியின்றி தீ மூட்டி உபயோகிக்கப்படும் எந்தக் காரியத்தையோ அல்லது வியாபாரமோ செய்யக்கூடாது. மாநகராட்சி கடைகள் மார்க்கெட்டுகள் இதர உரிமத்திற்க்குட்ப்பட்ட இடங்களில் அரசு மது விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்ட காலங்களில் முதல்முறையாக மதுபானக் கடைகள் நடத்துவதற்கு சிறப்பு அனுமதிக் கட்டணம் ரூ.20000/- (ரூபாய் இருபது ஆயிரம் மட்டும்) பெற்றுக் கொண்டும், மாத உரிம 15% உயர்வு செய்தும், மாமன்ற ஒப்புதலுடன் அனுமதிக்கலாம். தொடர்ந்து அதே கடையில் நடத்துவதற்கு தொடரும் ஒவ்வொரு ஆண்டுக்கும். சிறப்பு கட்டணம் பெற்று ஆணையாளர் ஒப்புதலுடன் அனுமதி நீடித்து வழங்கலாம். தமிழக அரசு மதுவிலக்குப் பிரிவு உதவி ஆணையாளரிடம், இந்த இடம் குறித்து தகுதிச்சான்றிதழ் பெற வேண்டும். மற்ற காலங்களில் மதுபானம் விற்க கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு மீறி செய்யப்படுமானால் கொடுக்கப்பட்ட உரிம ரத்து செய்யப்படுவதுடன் ஒரு நாளைக்கு ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) வரை அபராதம் விதித்தல் போன்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். (மாமன்ற தீர்மான எண்:269 நாள் 28.11.2002).

44. எல்லா உரிமதாரர்களும் (மாதாந்திர கடைகள் உட்பட) அவர்களுக்கு உரிமம் கொடுக்கபட்ட இனங்களுக்கு வெளியே நீட்டிக் கொண்டு இருக்கும்படி எந்தப் பொருள்களையும் வைக்கவோ அல்லது விற்கவோகூடாது. அவ்வாறு வைத்தால் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அப்புறப்படுத்த ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. இது தொடர்பாக எந்தவித இழப்பீடும் கோர முடியாது.

45. உரிமதாரர் உரிம காலம் முடிவடைவதற்குள் இடையில் உரிம தொகை செலுத்த முடியாத காரணத்தினாலோ அல்லது இதர காரணத்தினாலோ உரிம முறிக்கும் பொழுது அந்த உரிம காலமான ஓராண்டு உரிம தொகை முழுவதும் மாநகராட்சிக்கு செலுத்த கடமைப்பட்டவராவார். மேற்படி உரிம காலத்தில் இடையில் மேற்படி உரிம இடத்தை மறு ஏலம் விட்டு அதனால் வரும் தொகை உரிமதாரர் செலுத்த வேண்டிய உரிம தொகைக்கு வரவு வைத்துக் கொண்டு பாக்கித் தொகைக்கு உரிமதாரர் மீது வழக்கு தொடர்ந்து உரிம தொகையை வசூலிக்க ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

46. உரிமத்திற்கு உட்பட்ட இடம் மாநகராட்சிக்கு தேவை என்றோ அல்லது பொது நலன் உத்தேசித்து அப்புறப்படுத்த வேண்டுமென்றோ ஆணையாளர் கருதினால் எவ்வித முன் அறிவிப்புமின்றி அப்புறப்படுத்த ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. அப்புறப்படுத்தப்பட்டதற்கு பின் வரக்கூடிய காலத்திற்கு விகிதாச்சாரப்படி (Proportionate) தொகையை மனுச் செய்து உரிமதாரர் திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டியது, மேற்படி அப்புறப்படுத்தியதால் தன்னுடைய தொழில் பாதித்துவிட்டது என்று இழப்பீடு அல்லது வட்டி ஏதும் கோர உரிமதாரருக்கு உரிமை இல்லை.

47. ஆண்டு/மாதாந்திர உரிமம் அடிப்படையில் நடத்தப்படும் உரிமத்திற்கு பிரதிமாதம் 5ம் தேதிக்குள் அந்த மாத உரிமத்தொகையை செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் அரசாணை நிலை எண். 26 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) துறை நாள். 28.01.1994-ன்படி 18% அபராதம் விதித்து வசூலிக்கப்படும்.

48. மாநகராட்சிக்குச் சொந்தமான கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமதாரர்கள் மாதாந்திர உரிம தொகையோ அல்லது மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய பாக்கியிருந்தாலோ அம்மாதிரி கடைகளை அலுவலகம் மூலம் பூட்டவும், உரிமதாரர்களை அப்புறப்படுத்தவும் ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

49. காவல்துறை அல்லது நெடுஞ்சாலைத்துறையின் போக்குவரத்து இடைஞ்சலாகக் கருதி ரோடு மார்ஜின் கடைளை காலி செய்தால் மாநகராட்சி எவ்வித பொறுப்பும் ஏற்க இயலாது. அதற்காக ஏலதாரர் எவ்வித இழப்பீடும் கோர முடியாது.

50. அ) வரக்கூடிய ஆண்டுகளுக்கு உரிமதாரர் முன்கூட்டியே தொகையை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திக் கொள்வதன் மூலம் தனக்கு மேற்படி அடுத்த ஆண்டிற்கு உரிமத்தை புதுப்பித்துக் கொடுக்க வேண்டுமென்று ஏதாவது காரணத்தைச் சொல்லிக் கொண்டு கேட்பதற்கு எவ்வித உரிமையும் இல்லை. அப்படி ஏதாவது தொகை செலுத்தப்பட்டிருந்தால் அந்த தொகையை அவர்கள் விண்ணப்பித்து அதை திரும்ப பெற்றுக் கொள்ள வேண்டியது. அதற்கான வட்டி எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

ஆ) ஏலம்/டெண்டர் மூலம் செலுத்தப்படும் வைப்புத்தொகை/ கூடுதல் வைப்புத்தொகைகளுக்கு எந்த விதத்திலும் வட்டி வழங்கப்படாது.

51. ஏல அறிவிப்பில் கண்டுள்ள பொது நிபந்தனைகள் சம்பந்தமாக உரிமதாரர்களுக்கு எழும் சர்ச்சைகளுக்கும் விளக்கங்களுக்கும் ஆணையாளரின் தீர்ப்பே முடிவானது.

52. இந்த ஏல நிபந்தனைகள் சம்பந்தமாகவும், அதில் கண்ட உரிம நிபந்தனைகள் சம்பந்தமாகவும், வியாக்யானம் செய்வதிலும் நடைமுறையிலும் ஏதாவது அபிப்பிராய பேதம் ஏற்பட்டாலும், உரிம வாய்தா முடிந்தபின் ஏதாவது பிணக்கம் அபிப்பிராய பேதம் ஏற்பட்டாலும் மாநகராட்சி ஆணையரின் முடிவுப்படியே (Arbitration) நடந்து கொள்ள வேண்டியது.

53. ஏலம் எடுக்கப்பட்ட இனம் எந்த நிலையில் உள்ளதோ அந்தநிலையிலேயே (As is where is) எடுத்துக் கொள்ளவேண்டும். அது சம்மந்தமாக இவ்வாறு இருக்க வேண்டும் அல்லது அவ்வாறு இருக்க வேண்டும் என்று ஏதாவது குறைகளை கூறுவதும் மற்றும் இதர சர்ச்சைகள் எழுப்புவதும் மற்றும் அதன் பேரில் ஏலத் தொகையை குறைக்க வேண்டும் என்றோ அல்லது இழப்பீடு கொடுக்க வேண்டுமென்றோ கேட்பது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இது சம்மந்தமாக ஆணையாளர் எடுக்கும் தீர்ப்பே முடிவானது.

54. சாலையோரக் கடைகள் மற்றும் மார்க்கெட்டுகள் போன்ற இனங்களில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமையை ஏலம் எடுப்பவர்கள் உரிய கட்டணங்கள் முறையான மாநகராட்சி முத்திரையிட்ட ரசீது கொடுத்து வசூலித்துக் கொள்ள வேண்டியது அவர்களுடைய பொறுப்பேயாகும், யாரும் கட்டணம் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் எழும் பிரச்சனைகள் அல்லது இழப்புகளுக்கு மாநகராட்சி பொறுப்பல்ல.

55. சென்ற நிதியாண்டின் இடையில் புதிதாக சேர்க்கப்பட்ட இனங்களுக்கு இந்த ஏல அறிவிப்பில் மாறுதலான நிபந்தனைகள் ஏற்படுத்தி இருந்தாலொழிய முன்பு புதிதாக சேர்க்கும் பொழுது ஏற்படுத்திய அந்த நிபந்தனைகள் நீடிக்கும்.

56. மாதாந்திர உரிம அடிப்படையில் விடப்பட்டுள்ள கடைகளுக்கு இந்த நிபந்தனைகள் பொருந்தும்.

57. உரிமதாரர்கள் பாக்கி கட்டாமலோ அல்லது ஏல நிபந்தனைகளின்படி மாநகராட்சி நடவடிக்கை எடுத்தாலோ, மாநகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரக்கூடாது. அவ்வாறு வழக்குத் தொடர்ந்தால் உரிம ரத்து செய்யப்படுவதுடன் அடுத்து வரும் ஏலங்களில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.

58. ஏலதாரர் ஏலத்தில் கலந்து கொள்வதற்கு முன் கடையை என்ன வியாபாரம் செய்வதற்கு ஏலம் கோரப்படுகிறது என்று எழுத்துமூலம் எழுதித்தர வேண்டும். அதை ஆணையாளரால் அல்லது அவரால் ஏலம் நடத்த நியமிக்கும் அதிகாரி ஏற்றுக் கொள்ளும்பட்சத்தில் ஏலம் கேட்க அனுமதிக்கப்படுவார்.

59. ஏலத்தில் அனுமதிக்கப்பட்ட கடையை வேறு மாற்று உபயோகத்திற்குப் பயன்படுத்தினால் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி உரிமம் ரத்து செய்யப்படும். ஏலம் எடுத்த நபர்கள்தான் கடைகளை நடத்த வேண்டும். கடையை உள் வாடகைக்கோ அல்லது உள் குத்தகைக்கோ விடக்கூடாது. கடையை வேறு நபருக்கு மாற்ற அனுமதிக்கப்படமாட்டாது.

60. ஏலம் விடப்பட்ட இனங்கள் கட்டணம் வசூலிப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதி தவிர அனுமதியற்ற பகுதிகளில் கட்டணம் வசூலிக்கும்பட்சத்தில் ஆணையாளர் அவர்களால் நிர்ணயிக்கப்படும் தொகை அபராதமாகச் செலுத்த வேண்டும்.

61. மாதாந்திர உரிமத்திற்கு விடப்படும் இனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட அளவைத் தவிர கூடுதலாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் ஏற்கனவே உள்ள உரிம தொகையில் இரட்டிப்புக் கட்டணமாக ஆக்கிரமிப்பு அகற்றப்படும் வரை அபராதக் கட்டணம் வசூலிக்கப்படும். மேலும் உரிமம் ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

62. இடவாடகை அடிப்படையில் தற்காலிக உரிமம் வழங்கப்பட்டு வாடகை செலுத்திக்கொண்டும் / வாடகை செலுத்தாமலும் / ஓராண்டுக்கு மேல் தொழில் செய்யாமல் இருக்கும் கடைகளுக்கு வழங்கப்பட்ட உரிமம் ரத்து செய்யப்படும்.

63. மாதந்திர கடை உரிமதாரர்கள் கடையை சுற்றி சுகாதாரத்துடன் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும், மீறினால் கடையின் உரிமம் ரத்து செய்யப்படும்.

64. அரசாணை எண்.100 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நதி4) நாள். 16.02.2000 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் கடிதம் ந.க.எண்.18215/2020/ஆர்-2 நாள்.24.12.2020 மாநகராட்சியில் வணிக வளாகத்தில் ஒரு கடை மட்டும் ஊனமுற்றோருக்காக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு (கடை ஏலம் விடுவது உட்பட) நடைமுறையிலுள்ள அனைத்து விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுத்தப்படவேண்டும். அத்துடன் கடை நடத்த உரிமம் பெறும் ஊனமுற்றவரே கடையில் அமர்ந்து நேரடியாக வியாபாரத்தில் ஈடுபட வேண்டும்.

65. ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாமாண்டில் 5% குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் தொகையில் 5% குத்தகை தொகை உயர்வும் செய்யலாம். உதாரணமாக 5% குத்தகை உயர்வுத்தொகை கீழ்குறிப்பிட்டுள்ளவாறு அமையும்.

ஆரம்ப ஆண்டு குத்தகை தொகை ரூ.100 என்றால் (ரூபாய் நூறு மட்டும்)

இரண்டாம் வருடத்திற்கான குத்தகை தொை ரூ.105/- (ரூபாய் நூற்றி ஐந்து மட்டும்)

மூன்றாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ.110.25/-(ரூபாய் நூற்றி பத்து மற்றும் இருபத்து ஐந்து பைசா மட்டும்) ஆக இருக்கும்

66. மூன்றாண்டுகளுக்கொருமுறை அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் ஆகிய இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமை பொது ஏலத்தில் விடப்படவேண்டும்.

67. இவைகள் தவிர மாநகராட்சியிலுள்ள அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமைகளை குத்தகைக்கு விடுவதற்காக ஏற்கனவே நடைமுறையில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் தொடரும்.

68. உரிம காலத்தில் வேறேனும் கட்டுப்பாடுகளின் எதையேனும் குறைப்பதற்கும் மாற்றுவதற்கும் ஆணையாளருக்கும்/மாமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

69. ஒவ்வொரு இனத்திற்கும் ஏலம் நடத்தும் அலுவலரால் அரசு மதிப்பு நிர்ணயம் செய்யப்படும். அவசியம் ஏற்பட்டால் இத்தொகையை மாற்றி அமைக்க ஆணையருக்கு அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏலம் விடும் அலுவலருக்கு உரிமை உண்டு.

70. பொதுவாக ஒப்பந்தப்புள்ளியில்/ஏலத்தில் உயர்ந்தபட்ச தொகை கேள்விதாரருக்கு மட்டுமே உறுதி செய்வது குறித்து மன்றத்திற்கு விபரங்கள் வைக்கப்படும். ஆனால் யாதொரு காரணமும் சொல்லாமல் எந்த கேள்விகளையும் ஒப்புக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ அல்லது மறு ஏலம் நடத்தவோ ஆணையருக்கு பூரண அதிகாரம் உண்டு.

71. அ)மாநகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படலாம். மூன்று ஆண்டுகளைக்கொண்ட ஒரு தொகுப்புக்கால அளவு முடிவடைவதன்பேரில், அக்குத்தகை தன்னயல்பாகவே(automatically) புதுப்பிக்கப்படும். இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை தொகை 15(பதினைந்து) சதவீதம் உயர்த்தப்படும்.

ஆ)ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர், குத்தகை வாடகை மறு மதிப்பீடு செய்யப்படவேண்டும். தற்போதைய குத்தகைதாரருக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையிலான திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில், மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகைக்கால அளவை நீட்டித்துக்கொளள முன்னுரிமை அளிக்கலாம். அவர் ஒப்புக்கொள்ளவில்லையானால், அச்சொத்து பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட வேண்டும்.

72. ஏலம் உறுதி செய்து ஏலதாரருக்கு அனுமதி வழங்கப்பட்ட பின் இரண்டாம் ஏலதாரர் செலுத்திய வைப்புத்தொகை திரும்ப வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். உரிமத்தின் வைப்பு தொகை, சொத்துமதிப்பு சான்றிதழ் அல்லது கூடுதல் வைப்பு தொகை உரிம தொகுப்பாண்டு தணிக்கை முடிந்தபின் ஆட்சேபணை எழுப்பப்பட்டிருந்தால் அதற்கான இழப்பீட்டு தொகை கணக்கீட்டு ஈடு செய்த பின்னர் மீத தொகை திரும்ப வழங்கப்படும்.

73. மாநகராட்சி ஏல விதிகளில் உள்ள கட்டண விபரப்படி இனம் வாரியாக டிக்கெட் அச்சடிக்கும் போது GST எண்ணுடன் அச்சடித்து மைய வருவாய் பிரிவில் காண்பித்து மாநகராட்சி முத்திரை பெற்று கட்டணம் வசூல் செய்யப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் மாநகராட்சி முத்திரை இல்லாமல் கட்டணம் வசூல் செய்யக்கூடாது. மேற்படி இரசீதுகளில் உரிமதாரர் பெயர் மற்றும் கைபேசி எண் அச்சடிக்கப்படவேண்டும்.

74. உரிம இடத்தில் அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் லாகரி வஸ்துகள் விற்பனை செய்யவோ பதிக்கி வைக்கவோ கூடாது. மீறினால் தங்களது உரிமம் ரத்து செய்து காவல்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தனி நிபந்தனைகள்

பிராணிகள் வதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்

கட்டணம் வசூல் செய்யும் விபரம்

1. நெல்பேட்டை ஆடுவதைச்செய்யும் கூடத்தில் ஒவ்வொரு ஆட்டுக்கும் ரூ.50/-
2. அனுப்பானடி ஆடுவதைச்செய்யும் கூடத்தில் ஒவ்வொரு ஆட்டுக்கும் ரூ.50/-
3. ஒத்தப்பட்டி மாடு வதை செய்யுமிடத்தில் ஒவ்வொரு மாட்டுக்கும் ரூ.200/-

தனி நிபந்தனைகள்:-

1) வதை செய்யுமிடத்தில் வதை செய்வது சம்மந்தமாக மாநகராட்சியாளரால் நிர்வாகத்தை உத்தேசித்து அடிக்கடி போடப்படும் உத்திரவுகளின்படி உரிமதாரர் நடந்து வரவேண்டும்.

2) மேற்கண்ட இனத்திற்கான கட்டண விவரங்களை தெளிவாக, நீல நிற அறிவிப்புப்பலகையில் வெள்ளை நிற எழுத்துக்களில் எழுதி வைக்க வேண்டும். பலகை குறைந்தது 5'x3' அடி அளவிலும் எழுத்துக்கள் குறைந்தது 5 inch அளவிலும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பலகையை தற்காலிக அல்லது நிரந்தர மறைப்புகள் கொண்டு மூடக்கூடாது. ஆய்வின் போது அவ்வாறு கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்படும்.

ஆ) காந்தியடிகள் பிறந்த மற்றும் மறைந்த தினம், திருவள்ளுவர் தினம், புத்தர் பிறந்த தினம், மகாவீரர் பிறந்த தினம் மற்றும் அரசு குறிப்பிடும் தினம் ஆகிய நாட்களில் மேற்படி வதை செய்யும் இடங்கள் மூடப்பட்டிருக்க வேண்டும்.

3) அனுமதி பெறாமல் பிராணிகள் கொல்லப்பட்டால் உரிமதாரர் ஆணையாளர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும்.

4) அ) பிராணிகள் வதை செய்வதை மேல் பார்க்கும் அலுவலரின் விருப்பப்படி உரிமதாரர் நடக்க வேண்டும். அவர் எந்த காரணம் பற்றியாவது எந்தப் பிராணியாவது வதை செய்யக்கூடாதென்று தள்ளுபடி செய்தால் உரிமதாரர் அதற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

ஆ) பிராணிகள் வதை செய்யுமிடத்தில் கட்டிடத்தில் பழுது பார்ப்பதிலோ அல்லது அபிவிருத்தி செய்வதிலோ தற்காலிகமாக ஏதாவது அசௌகரியம் ஏற்பட்டால் உரிமதாரர் அதற்காக எவ்விதமான இழப்பீடும் கேட்கக் கூடாது.

இ) பிராணிகள் வதை செய்யுமிடத்தினை உரிமதாரர்கள் அன்றாடம் சுத்தம் செய்து சுகாதாரமாக வைத்திருக்க வேண்டும். வளாகம் முழுமையும் தூய்மை செய்தலும் சுகாதாரமாக வைத்திருத்தலும் உரிமதாரரின் முழு பொறுப்பாகும்.

5) அ) பிராணிகள் வதை செய்யுமிடத்திற்குள் மாமிசத்தையோ மற்ற பாகங்களையோ, இரத்தத்தையோ விற்கக்கூடாது. கொல்லப்பட்ட பிராணிகளின் தோல்களையும் இரத்தத்தையும், மாமிசத்தையும் மற்ற பாகங்களையும் கொல்லப்பட்ட நேரத்திலிருந்து 3 மணி நேரத்திற்குள் அவைகளின் சுவான்தார் அப்புறப்படுத்த வேண்டும். மேலும் மேற்படி இடத்தை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் தன் சொந்த செலவில் பராமரிக்க வேண்டியது.

ஆ) வதை செய்யப்படவேண்டிய பிராணிகளை மட்டும் தான் வதை செய்யுமிடத்தில் அனுமதிக்க வேண்டும். வதை செய்யுமிடத்தில் பிராணிகளை விற்பனை செய்வதை அனுமதிக்கப்படமாட்டாது. மேலும் அந்த இடத்தை பிராணிகள் நிறுத்தும் இடமாக உபயோகப்படுத்தக்கூடாது.

6) வதை செய்வதற்கேற்ப கட்டிடத்திற்கு உரிமதாரரால் அல்லது அவர் ஆட்களால் கெடுதல் ஏற்பட்டால் அதற்கு உரிமதாரர் பொறுப்பாகவேண்டும்.

7) ஆடு, மாடு அடிக்கும் இடங்களில் கறிக்கடைக்காரர்களுக்கோ அல்லது ஆடு, மாடு அடிப்பதில் சம்மந்தப்பட்டவர்களுக்கோ எவ்வித உரிமையும் கிடையாது. அங்கு நடத்தும் எல்லா நடவடிக்கைகளுக்கும் உரிமதாரரே பெறுப்பாவார்.

8) நெல்பேட்டை, அனுப்பானடி மற்றும் ஒத்தப்பட்டி வதை கூடங்களில் ஆடு மற்றும் மாடுகளை காலையில் 4 மணி முதல் 10 மணி வரையிலும் தான் வதை செய்ய வேண்டும். அந்தப் பிராணிகளை அன்றைய முன்தினம் பிற்பகல் 2 மணியிலிருந்து 3 மணிவரை முன் சோதனை செய்த பிறகுதான் வதை செய்ய அனுமதிக்கப்படும்.

9) இதற்காக மாநகராட்சி நிர்வாகச் செலவில் நியமிக்கப்பட்டுள்ள கால்நடை உதவி மருத்துவ அதிகாரி மற்றும் சுகாதார அலுவலர்களால் அறிந்து, தெரிவிக்கும் வதை செய்யப்படும் பிராணிகளுக்கு ஆத்ராக்ஸ் (Authrax) வியாதி இருப்பதாக மிருகங்களிலிருந்து மனிதர்களுக்கு பரவக்கூடியதும் அருவருக்கத்தக்கதுமான வியாதிகள் தென்பட்டாலும் தற்காலிகமாக வதை செய்யும் இடத்தை மூடுவதற்கு மேலும் இதற்காக கூடுதல் பணியாளர்கள் நியமித்து சுகாதாரத்தைப் பாதுகாக்க ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. அதன் நிமித்தம் மூடப்பட்டால் அதற்காக இழப்பீடோ அல்லது தள்ளுபடியோ கோர முடியாது.

தினசரி மார்க்கெட்டுகள் மற்றும் வாரச்சந்தைகள் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்

கட்டணம் வசூல் செய்யும் விபரம்

மார்க்கெட் 4 x 4 அளவில் கடை ஒன்றிற்கு தினசரி கட்டணம் - ரூ.20.00

1. பைபாஸ் ரோடு வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் சந்தை
2. கூடல்நகர் வாரச்சந்தை (திங்கள் கிழமை மட்டும்)
3. சாந்திநகர் வாரச்சந்தை(வியாழன் கிழமை மட்டும்)
4. பழைய விளாங்குடி வாரச்சந்தை (வியாழன் கிழமை மட்டும்)
5. ஆணையூர் வெள்ளிக்கிழமை வாரச்சந்தை கட்டணம் வசூல்
6. காமராஜர் பாலம் வைகை ஆற்றங்கரை கண்ணன் டிபார்மெண்ட் ஸ்டோர் முன்புறம் உள்ள ரோட்டின் ஓர பகுதியில் வைகை ஆறு வரை உள்ள காலியிடத்தில் சனிகிழமை தோறும் நடைபெறும் வாரச்சந்தை
7. வார்டு-22 கோச்சடை பகுதியில் புதன் கிழமை தோறும் நடைபெறும் வாரச்சந்தை
8. எல்லீஸ்நகர் வீட்டுவசதி வாரியம் அலுவலகம் முன்பு செவ்வாய் கிழமை மட்டும் நடைபெறும் வாரச்சந்தை (எல்லீஸ் நகர் வாட்டர்டேங்க் முதல் லைப்கேர் மருத்துவமனை முடிய மட்டும்)
9. வார்டு எண். 60-ல் வில்லாபுரம் ஹவுசிங் போர்டு பகுதியில் திங்கட்கிழமை நடைபெறும் வாரச்சந்தை
10. வில்லாபுரம் வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு வாரச்சந்தை(வியாழன் கிழமை மட்டும்)
11. பைக்கராவில் புதன்கிழமை தோறும் நடைபெறும் வாரச்சந்தை
12. திருப்பரங்குன்றம் விசேஷ காலங்களில் சாலை ஓர கடைகள் வசூல்
13. திருநகர் அண்ணா பூங்கா அருகில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் வாரச்சந்தை
14. திருநகர் மேட்டுப்பகுதி வாரச்சந்தை (செவ்வாய் கிழமை)
15. இராம்நகர் தினசரி மார்க்கெட்

    (முன்பாக கட்டிடத்தில் உள்ள 8 கடைகளும் மார்க்கெட் உட்பக்கம் இருக்கும் மீன் மற்றும் கருவாட்டு கடைப்பகுதிகளும் மார்க்கெட் மேற்குப் பக்கமுள்ள ஓட்டுச் சரகக் கடைகளும் மற்றும் கீழ்ப்பக்கமுள்ள கறிக்கடை பகுதியிலுள்ள 16 கடைகளும் நீங்கலாக) மொத்தம் 59 மாதாந்திர கடைகள் நீங்கலாக)

16. ஜம்புரோபுரம் காய்கறி மார்கெட் பலதரப்பட்ட கடைகள்

    தினசரி கடை வாடகை ஒன்றுக்கு 4 x 4 = 16 ச.அடிக்கு ரூ.20.00 ஜம்புரோபுரம் மார்க்கெட்டிற்கு மேற்கே புதிதாக கட்டப்பட்டுள்ள 31 கடைகளும் ஜம்புரோபுரம் மார்க்கெட்டின் வடக்குப்பக்கம் டிவிஷன் ஆபிஸ் மேற்குப்பக்கம் உள்ள கல்தள பொட்டல் பகுதியில் கூடும் மார்க்கெட் கடைகளுக்கு கடை 1க்கு தினசரி கட்டணம் வசூல் 4 x 4= 16ச.அடிக்கு ரூ.20.00 (ஜம்புரோபுரம் மார்க்கெட்டில் அலுவலகம் மூலம் வசூல் செய்யப்படும் ஏற்கனவே உள்ள 27 மாதாந்திர கடைகளும் 13 காலியிடக் கடைகளுக்கு (4 x 4 = 16 ச.அடிக்கு)- ரூ.20.00 வீதம் வசூலிக்கப்படும் தினசரி கடைகளும் நீங்கலாக)

17. கோ.புதூர் மார்க்கெட்

கோசாகுளம் புதூர் மாநகராட்சி சுகாதார வட்ட அலுவலகத்தின் தென்புறத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் கூடும் தினசரி காய்கறி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை கடை ஒன்றுக்கு (4x4=16 ச.அடி) தினசரி கட்டணம் ரூ.20.00-ம் அதற்கு மேற்பட்ட கூடுதல் ஒவ்வொரு பாகத்திற்கும் தினசரிக் கட்டணம் ரூ.20.00 மேற்படி மார்க்கெட் புதிதாக கட்டப்படும் கட்டிடத்திற்கு மாற்றம் செய்யும் பொழுது மேற்படி மார்க்கெட்டில் கடை வைத்துள்ள பயனீட்டாளர்களுக்கு ஆணையாளர் அவர்களால் கடை ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி பயனீட்டாளர்களிடம் மார்க்கெட்டை மாற்றி கட்டணம் வசூல் செய்து கொள்ள வேண்டும்.

18. அகிம்சாபுரம் தினசரி காய்கறி மார்கெட்

19. கீழமாரட் வீதி மார்க்கெட்

கீழமாரட் வீதியில் அமைக்கப்பட்டுள்ள கீழமார்க்கெட் எக்ஸ்டென்சன் பிளாக் கட்டிடம் மற்றும் புது மார்க்கெட் கட்டிடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் பாத்தியதை.

20. முனிச்சாலை ரோடு பள்ளிவாசல் எதிர்புறம் சாலையோரம் இயங்கி வரும் தினசரி காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

21. கிருஷ்ணாபுரம் குறுக்குச் சந்து தினசரி மார்க்கெட் (பழைய குயவர்பாளையம் மீன் மார்க்கெட் உள்ள இடம்

22. அவனியாபுரம் சௌராஷ்ட்ராபுரம் மார்க்கெட்

23. புதுமகாளிப்பட்டி தினசரி மார்க்கெட்

24. தெற்குவாசல் தினசரி மார்க்கெட்

சின்னக்கடை தெருவில் தெற்குமாரட் வீதி சந்திப்பில் தொடங்கி பள்ளிவாசல் வரை இருபுறமும் தெற்குமாரட் வீதியில் கதவு எண்:165 முதல் (திரௌபதியம்மன் கோவில் மேற்கு பக்கம்) கதவு எண்:199ஏ வரை தென்புறம் மட்டும் நடைபெறும் தினசரி காய்கறி கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (தெற்குவாசல் மேற்புறமுள்ள 19 பலசரக்கு கடைகளும் கீழ்ப்புறம் உள்ள 12 மாதாந்திர கடைகளும் நீங்கலாக)

25. கீழ்மதுரை காலனி தென்புறமுள்ள புது மார்க்கெட் (காமராஜபுரம்)

26. பழைய இங்கிலீஸ் கிளப் சந்து தினசரி காய்கறி மார்க்கெட்

27. கான்பாளையம் 1 வது சந்து தினசரி காய்கறி கடைகள்

28. கீரைத்துறை தினசரி காய்கறி மார்க்கெட்

29. ஜெய்ஹிந்த்புரம் மார்க்கெட்

30. காஜிமார் தெரு மார்க்கெட்

31. திருப்பரங்குன்றம் தினசரி மார்க்கெட்

32. அவனியாபுரம் சிங்கராயர் தெரு தினசரி மார்க்கெட்

தனி நிபந்தனைகள்:-

1. மார்க்கெட் சம்பந்தமாக தற்போது அமுலிலிருக்கும் உபவிதிகளுக்கும் அவ்வப்பொழுது ஏற்படும் நிபந்தனைகளுக்கும் உரிமதாரர்கள் உட்பட்டு நடக்க வேண்டியது.

2. மார்க்கெட்களில் கட்டண விவரங்களை தெளிவாக, நீல நிற அறிவிப்புப்பலகையில் வெள்ளை நிற எழுத்துக்களில் எழுதி வைக்க வேண்டும். பலகை குறைந்தது 5'x3' அடி அளவிலும் எழுத்துக்கள் குறைந்தது 5 inch அளவிலும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பலகையை தற்காலிக அல்லது நிரந்தர மறைப்புகள் கொண்டு மூடக்கூடாது. ஆய்வின் போது அவ்வாறு கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்படும்.

3. மார்க்கெட்டுக்கு வெளியே இருக்கும் இடங்களில் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் உரிமதாரர் வசூலிக்கக் கூடாது. மார்க்கெட் இடங்களை சுற்றிலுமாவது பக்கங்களிலாவது சாமான்களை விற்க உரிமதாரர் ஒருவருக்கும் இடம் கொடுக்கக்கூடாது. அப்படி மீறி நடப்பவர்களை உரிமதாரர் காவல்துறையினர் வசம் ஒப்புவிக்க வேண்டும். மார்க்கெட்டிற்கு வெளியே மாநகராட்சி, அரசு அல்லது தனியார் நிலங்களில் விற்பனை செய்ய இடம் கொடுத்தால் அதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் உரிமதாரரே முழுபொறுப்பாவார்.

4. மார்க்கெட்டில் அந்தந்த வியாபாரத்திற்கு என்று ஏற்பட்ட இடத்தில் அல்லது ஆணையாளரவர்கள் குறிக்குமிடத்தில் அந்தந்தக் கடைகளை வைக்க உரிமதாரரே பொறுப்பாவார்.

5. உரிமதாரர் தனக்கு கொடுக்கப்பட்ட இடத்திற்குள் வியாபாரம் செய்ய வேண்டும். பொதுமக்கள் நடைபாதைக்கு இருக்கும் பாதைகளிலாவது வராண்டாவிலாவது எவ்விதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. எந்த வியாபாரத்திற்காக பிளாக்குகள் பிரிக்கப்பட்டிருக்கிறதோ அந்தந்த வியாபாரம் தான் அந்தந்த பிளாக்குளில் செய்ய வேண்டும். ஆனால் எந்த ஒரு வியாபாரத்தையும், எந்த இடத்திலிருந்தும், கட்டிடத்திலிருந்தும், பிளாக்கிலிருந்தும் மற்றொரு இடத்திற்கோ, கட்டிடத்திற்க்கோ பிளாக்கிற்கோ மாறி வருவதிலும் அல்லது ஏதாவதொரு வியாபாரத்தை மேற்படி இடத்திலோ, கட்டிடத்திலோ பிளாக்கிலோ ஏற்படுத்துவதிலும் மேலும் எந்த பிளாக்கில் அல்லது எந்தக் கடையில் என்ன வியாபாரம் செய்ய வேண்டும் என்பது சம்பந்தமாக ஆணையர் தீர்ப்பே முடிவானது.

6. அ)மார்க்கெட்டின் எல்லைக்குள் எந்த இடத்தையும் உரிமதாரர் குடியிருப்புக்காவது இதர உபயோகங்களுக்காவது அனுமதிக்கவோ அல்லது உபயோகப்படுத்தவோ கூடாது. மார்க்கெட்டின் எல்லைக்குள் ஆணையாளரவர்களின் எழுத்துப்பூர்வமான உத்திரவு பெறாமல் வித்தை காட்டுவதும், இராட்டினதூரி போடுவதும் இவைகளைப் போன்று பொது வேடிக்கைகளுக்கு உரிமதாரர் இடம் கொடுக்கக்கூடாது.

7. சாமான்கள் விற்பனை சம்பந்தமாக சுகாதார இலாகாவினர் செய்து வரும் காரியங்களில் மார்க்கெட் உரிமதாரர் தலையிடக்கூடாது. உரிமதாரர் மார்க்கெட்டுகளை ஒவ்வொரு நாளும் காலை 5 மணிக்கு திறந்து இரவு 10 மணிக்கு மூடிவைக்க வேண்டியது.

8. திலகர் திடல் மாதாந்திர உரிம கடைகளுக்கு போகும் வழி எவ்வித இடைஞ்சலுமின்றி தாராளமாக இருக்க வேண்டும்.

9. மார்க்கெட்டுக்குள் மாநகராட்சியால் விற்பனைக்காவது வேறு இதர காரியங்களுக்காவது கொண்டு வரும் எவ்வித சாமான்களுக்கும், வண்டிகளுக்கும், லாரிகளுக்கும் கட்டணம் வசூல் செய்யக்கூடாது.

10. மார்க்கெட்டுக்குள் மாநகராட்சி கட்டிடங்களை உரிமதாரர் சுத்தமாகவும் பழுதின்றியும் வைத்துக் கொள்ள வேண்டியது. மேற்படி கட்டிடங்களில் சுவர்களுக்காவது பலகைகளுக்காவது கீழ்தளத்திற்காவது ஏதேனும் சேதம் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் மராமத்து செலவுகளை மார்க்கெட்டு உரிமதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

11. தினசரி மார்க்கெட் நடைபாதைகளில், நடைபாதைகளுக்கு போதிய அளவு இடம் விட்டு மேற்படி நடைபாதைகளில் பொதுமக்கள், போக்குவரத்துக்கு எவ்வித இடைஞ்சலுமில்லாதவாறு உரிமதாரர் கவனித்துக் கொள்ள வேண்டும்.

12. விறகாவது, வைக்கோலாவது, பட்டி சம்பந்தமாக சாமான்களாவது கருவாடு முதலியன கொண்டுவரும் வண்டிகளாவது அவைகளுக்கென்று மார்க்கெட்டுகளில் பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் இடங்களைத் தவிர மற்ற இடங்களில் கொண்டு வரக்கூடாது. கடைகளுக்கு மத்தியிலிருக்கும் நடைபாதைகளின் ஊடே வண்டிகள் செல்வதற்கு அனுமதிக்க கூடாது.

13. உரிம முடிந்தவுடன் மாநகராட்சி இடங்களை மாநகராட்சிக்கு ஒப்புவிக்கத் தவறினால் உரிமதாரர் சம்மதமின்றி எவ்வித அறிவிப்பும் கொடுக்காமல் மேற்படி இடத்தை சுவாதீனப்படுத்தவும், அவ்விதம் செய்வதில் ஏற்படும் இழப்பை உரிமதாரரிடமிருந்து வசூலிக்கவும் ஆணையாளருக்கு முழு உரிமையுண்டு.

14. உரிமதாரர் எவ்வித காரணத்தைக் கொண்டும் மண்ணெண்ணை முதலிய நெருப்பு பற்றக்கூடிய எவ்வித சாமான்களையும் விற்பனைக்காகவோ அல்லது இருப்பாகவோ வைத்திருக்கக்கூடாது.

15. அபிவிருத்தி நிமித்தம் அல்லது மாற்றுத்திட்டத்தின் நிமித்தம் மாநகராட்சியரால் மார்க்கெட்டுக்கு அல்லது கடைகளுக்கு செய்யப்படும் காரியங்களினால் உரிமதாரருக்கு கொடுக்கப்படும் உத்திரவினால் உரிமதாரருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கோ, இழப்பிற்கோ உரிமதாரருக்கு யாதொரு இழப்பீடும் கேட்க உரிமையில்லை.

16. உரிம இடத்தில் ஏதாவது ஒரு பாகத்தை பொது உபயோகத்திற்காக உரிம காலத்தில் அவசியம் ஏற்பட்டால் அந்த இடத்தை எடுத்துக் கொள்வதற்கு மாநகராட்சி ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

17. மார்க்கெட்டுக்குள் உரிமதாரர் எவ்வித நிரந்தரமான அல்லது தற்காலிகமான கட்டிடங்களையோ அதிலும் முக்கியமாக மூங்கில் பாய், தென்னந்தட்டி, சாக்கு முதலியவைகளாலான வெப்பத்தட்டிகளை ஆணையாளர் உத்திரவின்றி போட்டுக் கொள்ளக்கூடாது. இந்த நிபந்தனையை மீறுபவர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டு வெளியேற்றப்படுவார்கள். இந்த நிபந்தனை ரோடு மார்ஜின் கடைகளுக்கும் மாதாந்திர வாடகைக் கடைகளுக்கும் பெட்டிக் கடைகளுக்கும் பொருந்தும்.

18. எதிர்பாராதவிதமாக ஏற்படும் கலகம், தீ விபத்து, தடுக்க முடியாத தொத்து வியாதி காலங்களில் தற்காலிகமாக மார்க்கெட்டை மூடச் செய்வதற்கு ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அப்பேர்ப்பட்ட காலத்திற்கு உரிமதாரருக்கு யாதொரு இழப்பீடும் கொடுக்க முடியாது.

19. உரிமதாரர் எக்காரணத்தை முன்னிட்டும் அட்டவணையில் குறித்த கட்டணத்திற்கு அதிகமாய் வசூல் செய்யக்கூடாது. அதற்கு மாறாக வசூல் செய்தால் உரிமதாரரின் பேரில் கிரிமினல் நடவடிக்கை உள்பட மற்றும் அலுவலகம் மூலமும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் உரிமம் ரத்து செய்து உரிமதாரர் பொறுப்பில் ஏலம் விடப்படும் மார்க்கெட்டுகளில் செய்யப்படும்பட்சத்தில் டவுன் நியூசென்ஸ் சட்டப்படி உரிமதாரர் பிராசிக்கியூசன் செய்யப்படுவார்.

20. இந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள இனங்கள் தவிர மற்றவை வழக்கம்போல் மார்க்கெட்டுகளில் ஒதுக்கபட்டுள்ள மற்ற கடைகள் மாநகராட்சியால் உரிமத்திற்கு நேரில் விடப்படும். அவைகளில் உரிமதாரருக்கு (Farmar) எவ்வித கட்டணம் வசூலித்துக் கொள்ளவோ அனுபவித்துக் கொள்ளவோ உரிமையில்லை.

21. தெற்குவாசல் மார்க்கெட்டிலும், இராம் நகர் மார்க்கெட்டிலும் வழக்கம் போல மாநகராட்சியால் நேரடியாக உரிமத்திற்கு விடப்பட்டுள்ள கடைகள் தவிர இதர தினசரி கடைகளில் மட்டும் (இதுவரை அலுவலகம் மூலம் தினசரி வசூல் செய்த கடைகள்) கட்டணம் - வசூல் செய்துகொள்வதற்கு மேற்படி மார்க்கெட்டுகளின் உரிமதாரர்களுக்கும் (Farmar) பாத்தியதை உண்டு. இந்த மார்க்கெட்டை ஒட்டியுள்ள ரோடு மார்ஜினிலோ அல்லது இருபக்க மார்க்கெட்டிற்கு மத்தியிலுள்ள சின்னக்கடை தெருவில் உள்ள நடைபாதைகளிலோ மீன் அல்லது கறிக்கடைகள் வைத்து வியாபாரம் செய்வதை உரிமதாரர் (Farmar) கண்டிப்பாக அனுமதிக்கக்கூடாது.

22. மாதாந்திர உரிம அடிப்படையில் விடப்பட்டுள்ள கடைகளுக்கும் இதே நிபந்தனைகள் பொருந்தும்.

23. தினசரி கட்டணம் அடிப்படையில் உசிதம் போல கடைகளை ஒதுக்கி அலுவலகம் மூலம் வசூல் செய்து கொள்ள ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

24. மார்க்கெட்டின் பொது உபயோகத்தில் உள்ள மின் இணைப்பிற்கான மின்நுகர்வு கட்டணம் சேர்ந்த மார்க்கெட் ஏலதாரரால் செலுத்தப்பட வேண்டும்.

வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம்

1) கோச்சடை லாரி நிறுத்தம் செய்யுமிடம்

<u>கட்டணம் வசூல் செய்யும் விபரம்</u>

சைக்கிள் ஒன்றுக்கு ரூ.3/-ம் (GST உட்பட) ஸ்கூட்டர் ஒன்றுக்கு ரூ.8/-ம் (GST உட்பட) மோட்டார்சைக்கிள் ஒன்றுக்கு ரூ.5/-ம் ஆட்டோ/சேர் ஆட்டோ ஒன்றுக்கு ரூ.30/-ம் (GST உட்பட) வேன் ஒன்றுக்கு ரூ.50/-ம் (GST உட்பட) கார் ஒன்றுக்கு ரூ.50/-ம் (GST உட்பட) லாரி ஒன்றுக்கு ரூ.120/-(GST உட்பட) டாரஸ் ஒன்றுக்கு ரூ.240/-(GST உட்பட)

<u>தனி நிபந்தனைகள்:-</u>

1) வளாகம் முழுமையும் தூய்மை செய்தலும் சுகாதாரமாக வைத்திருத்தலும் உரிமதாரரின் முழு பொறுப்பாகும்.

2) மாநகராட்சி ஏல விதிகளில் உள்ள கட்டண விபரப்படி இனம் வாரியாக டிக்கெட் அச்சடிக்கும் போது GST எண்ணுடன் அச்சடித்து பைல் வருவாய் பிரிவில் காண்பித்து மாநகராட்சி முத்திரை பெற்று கட்டணம் வசூல் செய்யப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் மாநகராட்சி முத்திரை இல்லாமல் கட்டணம் வசூல் செய்யக்கூடாது. மேற்படி இரசீதுகளில் உரிமதாரர் பெயர் மற்றும் கைபேசி எண் அச்சடிக்கப்பட வேண்டும்.

3) மேற்கண்ட இனத்திற்கான கட்டண விவரங்களை தெளிவாக, நீல நிற அறிவிப்புப்பலகையில் வெள்ளை நிற எழுத்துக்களில் எழுதி வைக்க வேண்டும். பலகை குறைந்தது 5'x3' அடி அளவிலும் எழுத்துக்கள் குறைந்தது 5 inch அளவிலும் இருக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் பலகையை தற்காலிக அல்லது நிரந்தர மறைப்புகள் கொண்டு மூடக்கூடாது. ஆய்வின் போது அவ்வாறு கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்படும்.

4) தபால் இலாகாவைச் சேர்ந்த தபால்காரர்கள் மற்றும் கொரியர் தபால்களை கொண்டு வரும் பணியாளர்கள் அலுவலக வேலையாக வரும் பொழுது அன்னார்களின் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யக்கூடாது.

5) மாநகராட்சி பணியாளர்கள்/அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அடையாள அட்டை காண்பிக்கும்பட்சத்தில் கட்டணம் வசூல் செய்யக்கூடாது.

6) உரிமதாரர் நிபந்தனையை கடைபிடிக்காமலோ அல்லது மீறி நடந்தாலோ பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தாலோ ஒவ்வொரு குற்றத்திற்கும் உரிமதாரருக்கு ஏலத்தொகையில் 10% அபராதம் விதிக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு. மேற்படி விஷயத்தில் ஆணையாளர் முடிவே இறுதியானதாகும். உரிமதாரருடைய உரிமம் ரத்து செய்யவும் அவர் செலவில் மறு ஏலம் நடத்துவதற்கு ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

7) உரிம இடத்தில் ஏதாவது ஒரு பாகத்தை பொது உபயோகத்திற்காக உரிம காலத்தில் அவசியம் ஏற்பட்டால் அந்த இடத்தை எடுத்து கொள்வதற்கு மாநகராட்சிக்கு முழு அதிகாரமுண்டு.

8) வருடந்தோறும் வெளியிடப்படும் பொது அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏலம்/டெண்டர் நிபந்தனைகள் அனைத்தும் இவ்வினத்திற்கு பொருந்தும்

9) உரிமதாரரின் கட்டுப்பாட்டில் பணிபுரியும் பணியாளர்கள் கட்டணம் வசூல் செய்யும் போது அடையாள அட்டை அணிந்து பணிபுரிய வேண்டும்.

10) எந்த சந்தர்ப்பத்திலும் மேற்படி இனம் தேவையென ஆணையாளரால் கருதப்படும்பட்சத்தில் எவ்விதமான முடிவும் எடுக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு. ஆணையாளர் அவர்களின் முடிவே இறுதியானது.

11) மேற்படி இடத்தில் சட்ட விரோத செயல்கள் எதுவும் நடைபெறகூடாது. மேற்படி இடத்தில் ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் அதற்கு மாநகராட்சி பொறுப்பேற்காது. ஏலம் முடிவுறும் காலம் மற்றும் திடீர் தணிக்கையின் போது உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமத்தில் குந்தகம் விளைவித்தால் உரிய அபராதம் விதிக்கப்படும். அபராதம் கட்ட தவறினால் உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமம் உடனடியாக ரத்து செய்ய ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

12) டெண்டர்/ஏலம் எடுத்த உரிமதாரர் மட்டுமே மேற்படி இனத்தை நடத்த வேண்டும். உள்குத்தகைக்கோ, மாற்று நபருக்கோ நடத்த அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு உள் குத்தகைக்கு விடப்பட்டது ஆய்வு செய்யும்போது கண்டறியப்பட்டால் உரிமம் உடனடியாக ரத்து செய்வதோடு, ஏற்கனவே செலுத்திய தொகை பறிமுதல் செய்யப்படும்.

எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம், ஆம்னி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமம்

1. எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் மற்றும் ஆம்னி பேருந்து நிலையத்திற்குள் நுழையும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஆம்னி பேருந்து ஒன்றுக்கு ரூ.150/-(GST உட்பட) கார் ஒன்றுக்கு ரூ.50/- (GST உட்பட) மற்றும் ஆட்டோ/சேர் ஆட்டோ ஒன்றுக்கு ரூ.30/-(GST உட்பட)

<u>தனி நிபந்தனைகள்</u>

1. மேற்படி நுழைவு கட்டணம் என்பது நாள் ஒன்றுக்கு மட்டுமே பொருந்தும். ஆம்னி பேருந்து நிலையத்தின் உள்ளே ஒரு நாளுக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் வாகனத்தை நிறுத்த அனுமதிக்கக்கூடாது. எக்காரணத்தை கொண்டும் GST எண் இல்லாமல் வசூல் செய்யக்கூடாது.

2. மாநகராட்சி ஏல விதிகளில் உள்ள கட்டண விபரப்படி இனம் வாரியாக டிக்கெட் அச்சடிக்கும் போது GST எண்ணுடன் அச்சடித்து மைய வருவாய் பிரிவில் காண்பித்து மாநகராட்சி முத்திரை பெற்று கட்டணம் வசூல் செய்யப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் மாநகராட்சி முத்திரை இல்லாமல் கட்டணம் வசூல் செய்யக்கூடாது. மேற்படி இரசீதுகளில் உரிமதாரர் பெயர் மற்றும் கைபேசி எண் அச்சடிக்கப்படவேண்டும்.

3. மேற்கண்ட இனத்திற்கான கட்டண விவரங்களை தெளிவாக, நீல நிற அறிவிப்புப்பலகையில் வெள்ளை நிற எழுத்துக்களில் எழுதி வைக்க வேண்டும். பலகை குறைந்தது 5'x3' அடி அளவிலும் எழுத்துக்கள் குறைந்தது 5 inch அளவிலும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பலகையை தற்காலிக அல்லது நிரந்தர மறைப்புகள் கொண்டு மூடக்கூடாது. ஆய்வின்போது அவ்வாறு கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்படும்.

4. மாநகராட்சி பணியாளர்கள்/அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அடையாள அட்டை காண்பிக்கும்பட்சத்தில் நுழைவு கட்டணம் வசூல் செய்யக்கூடாது.

5. தபால் தந்தி இலாகாவைச் சேர்ந்த தபால்காரர்கள் எக்ஸ்பிரஸ் டெலிவரி மெசஞ்சர்கள் அவர்களுக்கு ஏற்பட்ட உடையில் அவர் அலுவலக வேலையாக வரும் பொழுது அவர் கொண்டுவரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யக்கூடாது.

6. உரிமதாரர் ஏதாகிலும் ஒரு நிபந்தனையை தவறியோ அல்லது மீறி நடந்தாலோ அல்லது உரிய இடத்தைத் தவிர வேறு இடத்தில் வசூல் செய்தாலோ அல்லது பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தாலோ ஒவ்வொரு குற்றத்திற்கும் உரிமதாரருக்கு ஏலத்தொகையில் 10% அபராதம் விதிக்க ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. மேற்படி விஷயத்தில் ஆணையாளர் செய்யும் தீர்மானமே முடிவானதாகும். உரிமதாரருடைய உரிமத்தை ரத்து செய்யவும் அவர் செலவில் மறு ஏலம் போடவும் ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

7. இந்த உத்தரவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்காக மட்டும் வழங்கப்பட்டது.

8. உரிமதாரரின் கட்டுப்பாட்டில் உள்ள கட்டணம் வசூல் செய்யும் நபர் பெயருடன் கூடிய அடையாள அட்டை அணிந்து பணிபார்க்க வேண்டும்.

9. எந்த சந்தர்ப்பத்திலும் மேற்படி இனம் தேவையென ஆணையாளரால் கருதப்படும் பட்சத்தில் எவ்விதமான முடிவும் எடுக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு. ஆணையாளர் அவர்களின் முடிவே இறுதியானது.

10. ஆம்னி பேருந்து நிலையத்தில் வாகன வசூலின் போது சட்ட முரணான செயல்கள் எதுவும் நடைபெறக்கூடாது.

11. ஆம்னி பேருந்து நிலையத்தில் வாகன வசூலின் போது ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் அதற்கு மாநகராட்சி பொறுப்பேற்காது.

12. உரிமம் காலம் முடிவடைந்தபின் புதுப்பிக்கப்படாமல் எக்காரணத்தை கொண்டும் ஒருநாள் கூட உரிமம் நீட்டிப்போ அல்லது வசூல் செய்யவோ அனுமதி கிடையாது.

13. ஏலம் முடிவுறும் காலம் மற்றும் திடீர் தணிக்கையின் போது உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமத்தில் குந்தகம் விளைவித்தால் உரிய அபராதம் விதிக்கப்படும். அபராதம் கட்ட தவறினால் உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமம் உடனடியாக ரத்து செய்ய ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

14. எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் எதுவும் பயன்படுத்தக்கூடாது.

15. குத்தகை உரிமம் தொடர்பாக அவ்வப்பொழுது வெளியிடப்படும் அரசாணைகள் மற்றும் சட்ட விதிகளுக்கு கட்டுப்படவேண்டும்.

16. வருடந்தோறும் வெளியிடப்படும் பொது ஏல அறிவிக்கை ஏலம்/டெண்டர் நிபந்தனைகள் அனைத்தும் இவ்வினத்திற்கு பொருந்தும்.

2. எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்திற்குள் உள்ளே செல்லும் அனைத்து வாகனங்களுக்கும் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்

தனிநிபந்தனைகள்

1. பேருந்து நிலையத்திற்குள் நுழையும் பேருந்து ஒன்றுக்கு ரூ.15/- வீதம் வசூல் செய்ய வேண்டும். (பேருந்துகளுக்கு அரசால் கூடுதல் கட்டணம் வசூல் செய்ய தெரிவித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்பட்டால் அதன் அடிப்படையில் கட்டணம் வசூல் செய்யப்படவேண்டும்)

2. ஒரு நாள் என்பது இரவு 12 மணி முதல் மறு நாள் இரவு 12.00 மணி வரை உள்ள காலமாகும்

3. மேற்கண்ட இனத்திற்கான கட்டண விவரங்களை தெளிவாக, நீல நிற அறிவிப்புப்பலகையில் வெள்ளை நிற எழுத்துக்களில் எழுதி வைக்க வேண்டும். பலகை குறைந்தது 5'x3' அடி அளவிலும் எழுத்துக்கள் குறைந்தது 5 inch அளவிலும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பலகையை தற்காலிக அல்லது நிரந்தர மறைப்புகள் கொண்டு மூடக்கூடாது. ஆய்வின் போது அவ்வாறு கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்படும்.

4. மாநகராட்சி அனுமதி பெற்று உரிமதாரர் சொந்த செலவில் பேரிகார்டு அமைத்து கட்டணம் வசூல் செய்யவேண்டும்.

5. பேருந்து நிலையத்திற்குள் உள்ள காலியிடத்தை உரிமதாரர் யாதொரு உரிமமும் கோர இயலாது.

6. உரிமதாரர் பேருந்து நிலையத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.

7. பேருந்து நிலையத்திற்குள் மாநகராட்சி உபயோகத்திற்கு செல்லும் மோட்டார், டிராக்டர் அல்லது லாரிகளுக்கு கட்டணம் வசூலிக்கக்கூடாது.

8. பேருந்து நிலையத்திற்குள் மற்ற வாகனங்களை அனுமதிக்கக்கூடாது.

9. வேலை நிறுத்தம், கலவரம், பேரிடர் காலங்களில் மற்றும் இதர காரணங்களால் பேருந்துகள் பேருந்து நிலையத்திற்கு வராமல் போனால் ஏற்படும் இழப்பிற்கு நஷ்ட ஈடோ, இழப்பீடோ கோர இயலாது.

சைக்கிள் ஸ்டாண்டு/இரண்டுசக்கர வாகனகாப்பகங்களில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம்

1. ஆரப்பாளையம் பேருந்து நிலையம் எதிரில் உள்ள மேல் நிலை நீர்த்தொட்டியின் கீழ் இரண்டு சக்கர வாகனக்காப்பகத்தில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலித்துக்கொள்ளும் உரிமம்

2. திருநகர் இருசக்கர வாகன காப்பகம்

கட்டணம் வசூல் செய்யும் விபரம்

சைக்கிள் ஸ்டாண்டு/இரண்டு சக்கர வாகனக்காப்பகத்திற்கு வரும் சைக்கிள் நாள் ஒன்றுக்கு ரூ.3/-(GST உட்பட) வீதமும் மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டருக்கு ரூ.10/-ம் (GST உட்பட) டிரைசைக்கிளுக்கு ரூ.5/- (GST உட்பட) வீதமும், வசூல் செய்யவேண்டும்.

<u>தனி நிபந்தனைகள்:-</u>

1) லைசென்ஸ்தாரர் செலுத்த வேண்டிய தொகை முழுவதையும் செலுத்தி ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுத்தாலொழிய உரிமதாரர் உரிம பாத்தியதையை அனுமதிக்கப்படமாட்டாது.

2) ஒரு நாள் என்பது வாகனம் வைக்கப்படும் நேரத்திலிருந்து 12 மணி நேரம் வரை என்று கருத வேண்டும். இந்த கட்டணத்தை பெற்றவுடன் ரசீது ஒன்றை சைக்கிள் சொந்தக்காரருக்கு கொடுத்து விட்டு சைக்கிளை ஒப்புக் கொள்ள வேண்டும். சைக்கிள் சொந்தக்காரர் ஸ்டாண்டை விட்டு போகும் போது தான் கொடுத்த ரசீதைபெற்றுக் கொண்டு சைக்கிள்களை அவரிடம் ஒப்புவிக்க வேண்டும். சைக்கிள் உரிமதாரர் பொறுப்பில் இருக்கும் பொழுது காணாமல் போனாலும் அல்லது அதற்கு கெடுதி ஏற்பட்டாலும் உரிமதாரர்கள் அதற்கு பொறுப்பாவார்கள்.

3) மாநகராட்சி ஏல விதிகளில் உள்ள கட்டண விபரப்படி இனம் வாரியாக டிக்கெட் அச்சடிக்கும் போது GST எண்ணுடன் அச்சடித்து மைய வருவாய் பிரிவின் மூலம் காண்பித்து மாநகராட்சி முத்திரை பெற்று கட்டணம் வசூல் செய்யப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் மாநகராட்சி முத்திரை இல்லாமல் கட்டணம் வசூல் செய்யக்கூடாது. மேற்படி இரசீதுகளில் உரிமதாரர் பெயர் மற்றும் கைபேசி எண் அச்சடிக்கப்பட வேண்டும்.

4) மேற்கண்ட இனத்திற்கான கட்டண விவரங்களை தெளிவாக, நீல நிற அறிவிப்புப்பலகையில் வெள்ளை நிற எழுத்துக்களில் எழுதி வைக்க வேண்டும். பலகை குறைந்தது 5'x3' அடி அளவிலும் எழுத்துக்கள் குறைந்தது 5 inch அளவிலும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பலகையை தற்காலிக அல்லது நிரந்தர மறைப்புகள் கொண்டு மூடக்கூடாது. ஆய்வின் போது அவ்வாறு கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்படும்.

5) தபால் இலாகாவைச் சேர்ந்த தபால்காரர்கள் மற்றும் கொரியர் தபால்களை கொண்டு வரும் பணியாளர்கள் அலுவலக வேலையாக வரும் பொழுது அன்னார்களின் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யக்கூடாது.

6) மாநகராட்சி பணியாளர்கள்/அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அடையாள அட்டை காண்பிக்கும்பட்சத்தில் கட்டணம் வசூல்செய்யக்கூடாது.

7) உரிமதாரர் நிபந்தனையை கடைபிடிக்காமலோ அல்லது மீறி நடந்தாலோ பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தாலோ ஒவ்வொரு குற்றத்திற்கும் உரிமதாரருக்கு ஏலத்தொகையில் 10% அபராதம் விதிக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு. மேற்படி விஷயத்தில் ஆணையாளர் முடிவே இறுதியானதாகும். உரிமதாரருடைய உரிமத்தை ரத்து செய்யவும் அவர் செலவில் மறு ஏலம் நடத்துவதற்கு ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

8) உரிம இடத்தில் ஏதாவது ஒரு பாகத்தை பொது உபயோகத்திற்காக உரிம காலத்தில் அவசியம் ஏற்பட்டால் அந்த இடத்தை எடுத்து கொள்வதற்கு மாநகராட்சிக்கு முழு அதிகாரமுண்டு.

9) வருடந்தோறும் வெளியிடப்படும் பொது அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏலம்/டெண்டர் நிபந்தனைகள் அனைத்தும் இவ்வினத்திற்கு பொருந்தும்

10) உரிமதாரரின் கட்டுப்பாட்டில் பணிபுரியும் பணியாளர்கள் கட்டணம் வசூல் செய்யும்போது அடையாள அட்டை அணிந்து பணிபுரியவேண்டும்.

11) எந்த சந்தர்ப்பத்திலும் மேற்படி இனம் தேவையென ஆணையாளரால் கருதப்படும்பட்சத்தில் எவ்விதமான முடிவும் எடுக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு. ஆணையாளர் அவர்களின் முடிவே இறுதியானது.

12) மேற்படி இடத்தில் சட்ட விரோத செயல்கள் எதுவும் நடைபெறகூடாது. மேற்படி இடத்தில் ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் அதற்கு மாநகராட்சி பொறுப்பேற்காது. ஏலம் முடிவுறும் காலம் மற்றும் திடீர் தணிக்கையின் போது உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமத்தில் குந்தகம் விளைவித்தால் உரிய அபராதம் விதிக்கப்படும். அபராதம் கட்ட தவறினால் உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமம் உடனடியாக ரத்து செய்ய ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

13) டெண்டர்/ஏலம் எடுத்த உரிமதாரர் மட்டுமே மேற்படி இனத்தை நடத்த வேண்டும். உள்குத்தகைக்கோ, மாற்று நபருக்கோ நடத்த அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு உள் குத்தகைக்கு விடப்பட்டது ஆய்வு செய்யும் போது கண்டறியப்பட்டால் உரிமம் உடனடியாக ரத்து செய்வதோடு, ஏற்கனவே செலுத்திய தொகை பறிமுதல் செய்யப்படும்.

மாநகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிப்பிடங்களில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம்

1. செல்லூர் மார்க்கெட் கழிப்பிடம்
2. இரத்தினசாமி நாடார் தெரு கழிப்பிடம்
3. காமராஜர் சாலையில் உள்ள அனுப்பானடி வாய்க்கால் கட்டண கழிப்பிடம்

4. ஆர். எம்.எஸ் சாலை கட்டண கழிப்பிடம்

5. திருப்பரங்குன்றம் மலை பாதை அருகில் கட்டண கழிப்பிடம்

6. அமெரிக்கன் மிஷன் சர்ச் சந்து கட்டண கழிப்பிடம்

7. திலகர் திடல் சந்தை கழிப்பிடம்

8. ஓர்க்ஷாப்ரோடு கட்டண கழிப்பறை

9. கழிப்பிடம் (இரு சக்கர வாகனக்காப்பகம் செல்லும் வழியில் உள்ள கழிப்பிடம்)

10. ஆரப்பாளையம் பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம்

11. ஜம்புரோபுரம் மார்க்கெட் கழிப்பிடம்

12. அரசு இராஜாஜி மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவு நுழைவு வாயில் எதிர்புறம் உள்ள கழிப்பிடம்

13. சிந்தாமணி மெயின் ரோடு, பழைய குயவர் பாளையம் ரோடு கழிப்பிடம்

கட்டணம் வசூல் செய்யும் விபரம்

1. நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள மலப்பிறைகளில் பயன்படுத்திக் கொள்ள நபர் ஒன்றுக்கு ரூ.5/- வீதம் வசூலிக்க வேண்டும்.

2. மேற்படி குளியலறைகள் பயன்படுத்தி கொள்ள நபர் ஒன்றுக்கு 10/-ரூபாய் வீதம் வசூலிக்கப்படும்.

தனி நிபந்தனைகள்:-

1. ஏலம் நடைபெறும் நாளிலிருந்து ஏலம் விடப்பட்டு மாநகராட்சியால் ஒப்புக் கொள்ளபட்ட தொகைக்கு கட்டணம் வசூலிக்க உரிமம் வழங்கப்படும்.

2. மேற்கண்ட இனத்திற்கான கட்டண விவரங்களை தெளிவாக, நீல நிற அறிவிப்புப்பலகையில் வெள்ளை நிற எழுத்துக்களில் எழுதி வைக்க வேண்டும். பலகை குறைந்தது 5'x3' அடி அளவிலும் எழுத்துக்கள் குறைந்தது 5 inch அளவிலும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பலகையை தற்காலிக அல்லது நிரந்தர மறைப்புகள் கொண்டு மூடக்கூடாது. ஆய்வின் போது அவ்வாறு கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்படும்.

3. மாநகராட்சி ஏல விதிகளில் உள்ள கட்டண விபரப்படி இனம் வாரியாக டிக்கெட் அச்சடிக்கும் போது GST எண்ணுடன் அச்சடித்து மைய வருவாய் பிரிவின் மூலம் காண்பித்து மாநகராட்சி முத்திரை பெற்று கட்டணம் வசூல் செய்யப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் மாநகராட்சி முத்திரை இல்லாமல் கட்டணம் வசூல் செய்யக்கூடாது. மேற்படி இரசீதுகளில் உரிமதாரர் பெயர் மற்றும் கைபேசி எண் அச்சடிக்கப்பட வேண்டும்.

4. கழிப்பிடம் கட்டிடத்தில் சட்ட விரோத செயல்கள் எதுவும் நடைபெறகூடாது. அரசால் தடை செய்யப்பட்ட பீடி, சிகரெட் மற்றும் லாகிரி வஸ்துக்கள் விற்பனை செய்யக்கூடாது.

5. கழிப்பிடங்களை சுத்தம் செய்வதற்கான சுகாதார பணியாளர்களை உரிமதாரரே தனது செலவில் நியமித்து முறையாக கழிப்பிடக் கட்டிடத்தை பராமரிக்கவேண்டும். கழிப்பிடங்கள், குளியலறைகள், மூத்திரை பிறைகள் ஆகியவைகளில் எவ்விதமான மாறுதல்களும் செய்யக்கூடாது.

6. கழிப்பிடத்தின் உபயோகத்திற்காக பயன்படுத்தப்படும் மின் துய்ப்பு கட்டணத்தை உரிமதாரரே சொந்த செலவிலேயே தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு (TANGEDCO) செலுத்த வேண்டும்.

7. கழிப்பிடங்கள், குளியலறைகள், மூத்திரை பிறைகள் ஆகியவைகள் சுத்தமாக, சுகாதார முறையில் துர்நாற்றம் வராத வகையிலும் வாசனை பினாயில் அவ்வப்போது தெளித்தும் சிறுநீர் உப்பு படியங்களினால் தரையும், சுவர்களும் கெட்டு போகாத வண்ணம் கிருமி நாசினிகள் தெளித்து அவ்வப்போது கழுவி சுத்தமாக வைக்க வேண்டும்.

8. கழிப்பிடம் கட்டிடத்திற்கு தேவையான தண்ணீர் வசதியை உரிமதாரரே தேவையான ஏற்பாடுகளை மாநகராட்சி முன் அனுமதி பெற்று செய்து கொள்ள வேண்டியது. எக்காரணம் கொண்டும் குடிநீர் குழாய் இணைப்பிலிருந்து தண்ணீர் வழங்கப்பட மாட்டாது. தண்ணீர் வசதி இல்லை என்று தெரிவித்து உரிமதாரர் இழப்பீடு கோர இயலாது. நவீன கழிப்பிடங்களுக்கு தண்ணீர் வசதி இல்லாத இனங்களுக்கு உரிமதாரர் தனது சொந்த செலவில் தண்ணீர் வசதி செய்து கொள்ள வேண்டியது. உரிமம் காலம் முடிவுற்ற பின் இதில் எவ்வித உரிமைகளையும் உரிமதாரர் கோர இயலாது.

9. மேற்படி கட்டண கழிப்பிடம் கட்டிடத்தில் கழிப்பிடம் உபயோகத்தை தவிர வேறு எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்த கூடாது.

10. மாநகராட்சி சொத்திற்கு ஏதேனும் சேதாரம் ஏற்பட்டால் அதன் பேரில் மேற்கொள்ளப்படும் இழப்பீட்டு தொகை உரிமதாரரிடம் இருந்து வசூலிக்கப்படும்.

11. மேற்படி கட்டண கழிப்பிடத்தில் பொதுமக்களுக்கு அசம்பாவிதம் ஏற்படும்பட்சத்தில் அந்நிகழ்விற்கு தாங்களே முழு பொறுப்பேற்க வேண்டும். மாநகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

12. மாநகராட்சி பணியாளர்கள்/அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அடையாள அட்டை காண்பிக்கும் பட்சத்தில் கட்டணம் வசூல் செய்யக்கூடாது.

13. உரிமதாரர் நிபந்தனையை கடைபிடிக்காமலோ அல்லது மீறி நடந்தாலோ பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தாலோ ஒவ்வொரு குற்றத்திற்கும் உரிமதாரருக்கு ஏலத்தொகையில் 10% அபராதம் விதிக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு. மேற்படி விஷயத்தில் ஆணையாளர் முடிவே இறுதியானதாகும். உரிமதாரருடைய உரிமம் ரத்து செய்யவும் அவர் செலவில் மறு ஏலம் நடத்துவதற்கு ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

14. உரிம இடத்தில் ஏதாவது ஒரு பாகத்தை பொது உபயோகத்திற்காக உரிம காலத்தில் அவசியம் ஏற்பட்டால் அந்த இடத்தை எடுத்து கொள்வதற்கு மாநகராட்சிக்கு முழு அதிகாரமுண்டு.

15. வருடந்தோறும் வெளியிடப்படும் பொது அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏலம்/டெண்டர் நிபந்தனைகள் அனைத்தும் இவ்வினத்திற்கு பொருந்தும்.

16. உரிமதாரரின் கட்டுப்பாட்டில் பணிபுரியும் பணியாளர்கள் கட்டணம் வசூல் செய்யும் போது அடையாள அட்டை அணிந்து பணிபுரிய வேண்டும்.

17. எந்த சந்தர்ப்பத்திலும் மேற்படி இனம் தேவையென ஆணையாளரால் கருதப்படும் பட்சத்தில் எவ்விதமான முடிவும் எடுக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு. ஆணையாளர் அவர்களின் முடிவே இறுதியானது.

18. ஏலம் முடிவுறும் காலம் மற்றும் திடீர் தணிக்கையின் போது வழங்கப்பட்ட உரிமத்தில் குந்தகம் விளைவித்தால் உரிய அபராதம் விதிக்கப்படும். அபராதம் கட்ட தவறினால் வழங்கப்பட்ட உரிமம் உடனடியாக ரத்து செய்ய ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

டெண்டர்/ஏலம் எடுத்த உரிமதாரர் மட்டுமே மேற்படி இனத்தை நடத்த வேண்டும். உள்குத்தகைக்கோ, மாற்று நபருக்கோ நடத்த அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு உள் குத்தகைக்கு விடப்பட்டதாக ஆய்வு செய்யும் போது கண்டறியப்பட்டால் உரிமம் உடனடியாக ரத்து செய்வதோடு, ஏற்கனவே செலுத்திய தொகை பறிமுதல் செய்யப்படும்.

19. உரிமதாரர் கட்டணம் வசூல் செய்யும் பொழுது ஒவ்வொரு ரசீதிலும் அதற்குரிய கட்டணத்தை அச்சிட்டு உரிமதாராவது அல்லது அவருடைய ஏஜெண்டாவது தேதியுடன் கையெழுத்திட்டு அச்சு ரசீது அலுவலக முத்திரையுடன் கொடுத்து விகிதப்படி ஏற்பட்ட கட்டணத்தை வசூல் செய்ய வேண்டும். தினசரி வசூல் செய்ததற்கு சரியான கணக்கு வைத்திருக்க வேண்டும். ரசீதின் அடிக்கட்டை கணக்குகளையும் ஆணையாளர் அவர்கள் கேட்கும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும். ரசீது புத்தகங்களில் உள்ள ரசீதுகளுக்கு எண்:1ல் ஆரம்பித்து தொடர்ச்சியாக உரிம காலம் முடியும் வரையில் எண்கள் கொடுக்கப்பட வேண்டும். புத்தகங்கள் அலுவலக முத்திரை பெறுவதற்கு மாநகராட்சி அலுவலகத்தில் பிரத்தியேகமான பதிவேட்டில் பதிவு செய்து கொடுக்க வேண்டும். முத்திரை போடப்படும் புத்தகங்களுக்கு உரிமதாரால் கணக்குகள் வைக்கப்பட வேண்டும்.

20. நவீன கழப்பிடங்களுக்கு தண்ணீர் வசதி இல்லாத இனங்களுக்கு ஏலதாரர் தனது சொந்தப் பொறுப்பில் தண்ணீர் வசதி செய்து கொள்ள வேண்டியது. மாநகராட்சி மூலம் தண்ணீர் தேவைப்படும் பட்சத்தில் 10000 லிட்டர் லோடு ஒன்றுக்கு ரூ.1200/- வீதம் அல்லது அப்போதைய விலைப்படி தேவையான லோடுகளுக்கு முன்னதாக மாநகராட்சி கரூவூலத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டியது. இதை ஏலதாரர் உரிமையாக கோர இயலாது.

பேருந்து நிலையங்களில் **Display Board** அமைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம்

1) ஆரப்பாளையம் பேருந்து நிலையம் உட்புறம் மற்றும் வெளிபுறம் Display Board அமைத்து விளம்பரம் செய்ய மற்றும் Public Announcement System, Audio information and Advertisement டவுன் பேருந்து நிறுத்தும் இடம் 20x5 அளவில் = 8 nos, பேருந்து நிலையம் உட்புரம் வடக்கு மற்றும் தெற்கு பக்கம் 20x5 அளவில் =12 nos, நுழைவு வாயிலில் 4x3 அளவில் – 20 nos, மொத்த அளவு 2240 சதுர அடி விளம்பரம் செய்யும் உரிமம்.

2) எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்தில் பிளாட்பார்ம்களில் மாநகராட்சி அனுமதி பெற்ற இடங்களில் Display போர்டு வைத்து விளம்பரம் செய்வது , Public Announcement System, Audio information and Advertisement மற்றும் LED Display தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்வது (ஒவ்வொரு 10 நிமிடத்திற்கும் ஒரு நிமிடம் மாநகராட்சி வழங்கும் விளம்பரம் செய்திட வேண்டும்.)

<u>தனி நிபந்தனைகள்:-</u>

1) உரிமதாரருக்கு தன் சொந்த செலவில் தயாரித்து வைக்கும் ஒரு பக்க விளம்பர போர்டில் விளம்பரம் செய்வது தவிர போர்டிலோ, நிலத்திலோ வேறு எந்தவிதமான பாத்தியம் கிடையாது. அந்த இடத்தை தனியாக ஏலம் விடவோ வேறு காரியத்திற்காக உபயோகப்படுத்திக் கொள்ளவோ உரிமதாரருக்கு உரிமையில்லை.

2) மாநகராட்சி சொத்துக்களுக்கு எவ்வித சேதமும் விளைவிக்காமல் விளம்பரம் செய்ய வேண்டும்.

3) ஆட்சேபகரமானதும் அரசாங்கத்திற்கு விரோதமாகவும் அருவருக்கத்தக்கதுமான விளம்பரங்களை செய்யக்கூடாது.

4) போர்டுகளில் விளம்பரம் செய்வதைத் தவிர வேறு எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. விளம்பரங்கள் ஒட்டுதல் அல்லது எழுதுதல் தவிர வேறு எவ்விதமான அனுமதிக்கப்பட்டதற்கு மேல் கூடுதலான போர்டையும் சேர்க்க அனுமதிக்க இயலாது.

5) உரிம காலத்தில் தேவை என்று கருதினால் உரிமதாரருக்கு ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து எந்த போர்டையும் மாற்றியமைப்பதற்கு நிர்வாக அதிகாரிக்கு அதிகாரமுண்டு. அதனால் உரிமதாரருக்கு ஏற்படும் எவ்வித நஷ்டத்திற்கும் உரிமதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கேட்க உரிமையில்லை.

6) உரிம காலம் முடிந்தவுடன் அல்லது உரிம காலம் முடிவதற்குள் ஏதாவது காரணத்திற்காக உரிம மத்தியில் ரத்து செய்யப்பட்டால் உரிமதாரர் விளம்பரங்களை அழித்து நல்ல நிலையில் போர்டுகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

7) உரிம காலத்தில் எதிர்பாராத விதத்தில் எந்த ஒரு போர்டையாவது கழற்றி அப்புறப்படுத்த வேண்டியிருந்தால் அதை உரிமதாரர் தன் பொறுப்பில் செய்ய வேண்டும். அதற்காக எவ்வித நஷ்ட ஈடும் கேட்க உரிமை இல்லை.

8) எதிர்பாராத விதமாக விபத்து முதலிய காரணங்களால் போர்டு விழுந்தாலும், சேதம் ஏற்பட்டாலும் எவ்வித நஷ்ட ஈடும் மாநகராட்சியிடம் கோரக்கூடாது.

9. பொது ஏல நிபந்தனைகள் இந்த இனத்திற்கும் பொருந்தும்.

10) ஏலம் கேட்கும் நபர் பெயரில் மாநகராட்சியில் எவ்வித பாக்கியும் இல்லை என்ற சான்றிதழ் சமர்ப்பித்து உரிய டெபாஸிட் தொகையை செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

11) இந்த ஏலத்தில் கூறப்பட்ட அனைத்து விளம்பரங்களுக்கும் தனியாக விளம்பரவரி மாநகராட்சியில் செலுத்த வேண்டும்.

12) முழு ஏலத்தொகை உரிமதாரர் முன்னதாக செலுத்தி உரிம பத்திரம் எழுதிக் கொடுத்த பின் விளம்பரம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.

13) உரிமதாரருக்கு போர்டில் விளம்பரம் செய்வது தவிர போர்டிற்கோ நிலத்திலோ எவ்வித பாத்தியமும் கிடையாது. அந்த இடத்தை தனியாக ஏலம் விடவோ வேறு காரியத்திற்காக உபயோகப்படுத்திக் கொள்ளவோ உரிமதாரருக்கு உரிமையில்லை.

14) போர்டுகளுக்கு எவ்வித சேதமும் விளைவிக்காமல் விளம்பரம் செய்ய வேண்டும்.

15) ஆட்சேபகரமானதும் அரசாங்கத்திற்கு விரோதமாகவும் அருவருக்கத்தக்கதுமான விளம்பரங்களை செய்யக்கூடாது.

16) தொலைக்காட்சி பெட்டி மற்றும் போர்டுகளில் விளம்பரம் செய்வதை தவிர வேறு எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. விளம்பரங்கள் ஒட்டுவதை அல்லது எழுதுவதைத் தவிர வேறு எவ்விதமான அனுமதிக்கப்பட்டதற்கு மேல் கூடுதலான போர்டையும் சேர்க்க அனுமதிக்க கூடாது.

17) உரிம காலத்தில் தேவை என்று கருதினால் உரிமதாரருக்கு ஒரு 15 தினம் நோட்டீஸ் கொடுத்து எந்த தொலைக்காட்சி பெட்டி மற்றும் போர்டையும் மாற்றியமைப்பதற்கு ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. அதனால் உரிமதாரருக்கு ஏற்படும் எவ்வித நஷ்டத்திற்கும் உரிமதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கேட்க உரிமையில்லை.

18) உரிம காலம் முடிந்தவுடன் அல்லது உரிம காலம் முடிவதற்குள் ஏதாவது காரணத்திற்காக உரிம மத்தியில் ரத்து செய்யப்பட்டால் உரிமதாரர் விளம்பரங்களை அழித்து நல்ல நிலையில் போர்டுகளை ஒப்புவிக்கவேண்டும்.

19) உரிம காலத்தில் எதிர்பாராத விதத்தில் ஒன்றிரண்டு முறையாவது கழற்றி ரிப்பேர் செய்ய வேண்டியிருந்தால் அதை உரிமதாரர் தன் பொறுப்பில் செய்ய வேண்டும் அதற்காக எவ்வித நஷ்ட ஈடும் கேட்க உரிமை இல்லை.

20) தானாக போர்டு விழுந்தாலும், சேதம் ஏற்பட்டாலும் எவ்வித நஷ்ட ஈடும் மாநகராட்சியிடம் கோரக்கூடாது.

21) பொது ஏல நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்.

22) ஏலம் கேட்கும் நபர் அவர் பெயரில் மாநகராட்சியில் எவ்வித பாக்கியும் இல்லை என்ற சான்றிதழ் சமர்ப்பித்து உரிய மதிப்புத் தொகையில் 100% மற்றும் சேவை வரி, வருமானவரி தொகையை செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளவேண்டும்.

23) ஒப்புவிக்கப்படும் விளம்பர போர்டு 1க்கு ஆண்டு ஒன்றுக்கு விளம்பர வரியாக ஷெட்யூலில் கண்ட ஒரு வருடத் தொகை முழுவதையும் முன்னதாகவே செலுத்த வேண்டும்.

<u>புல் பிளாட்டுகள்</u>

1. ஹார்விப்பட்டி புல் பண்ணை

<u>தனி நிபந்தனைகள்:-</u>

1) ஆணையாளர் அல்லது ஏலம் நடத்துபவர் முடிவுப்படி ஏலம் முன் பின் நடத்தப்படும்.

2) ஆணையாளர் அவர்கள் குறிப்பிடும் ஒரு தேதிக்கு ஏலத்தை தள்ளி வைப்பதற்கு அதிகாரம் உண்டு. அவ்விதம் செய்வதில் அன்றைய தினம் எவர் ஒருவர் அதிகத் தொகைக்கு ஏலம் கேட்கிறாரோ அந்தக் தொகையானது ஏலம் மாற்றி வைக்கப்பட்டிருக்கும் தேதிகளிலும் அமுலில் இருக்கும்.

3) எல்லா ஏலங்களும், மாமன்றம் அதற்குரிய நிலைக்குழு அல்லது ஆணையாளர் ஆகியோர்களின் யாருடைய அதிகார வரம்பிற்குட்பட்டு இருக்கிறதோ அவர்களின் உறுதிக்குட்பட்டதாகும்.

4) மேல் குறிப்பிட்ட ஏல நிபந்தனைகளைத் தவிர ஏலம் / டெண்டர் நோட்டீஸ் மற்றும் வருடந்தோறும் பொது ஏல அறிவிப்பில் கண்டுள்ள அனைத்து பொது மற்றும் விசேஷ நிபந்தனைகளும் இதற்குப் பொருந்தும்.

5) ஏல இனங்களில் ஏதாவது நிர்வாக காரணங்களை முன்னிட்டு, ஏலம் விடுவதில் இருந்து நிறுத்தி வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அந்த இனங்களை ஏலம் நடத்தாமல் நிறுத்தி வைப்பதற்கு ஏலம் நடத்துபவரின் முடிவே இறுதியானது.

கொடுக்கப்பட வேண்டும்.

6) ஒவ்வொரு ஏல இனத்திலும், தனித்தனியாக டிமாண்ட் டிராப்ட் கொடுக்கப்பட வேண்டும்.

7) வண்டல் மண்ணை அகற்றுவதற்கு உரிமதாரர் அலுவலக உத்திரவு பெற்றுத்தான் அகற்றப்பட வேண்டும்.

8) புல்பிளாட்டுகளை உரிமதாரர் பொறுப்பில் பராமரித்து பாதுகாத்து புல் அறுவடை செய்து கொள்ள வேண்டும். இதற்காக ஏற்படும் எவ்விதச் செலவும் மாநகராட்சியால் வழங்கப்படமாட்டாது.

9) புல் பனியில் பட்டுப்போனாலோ அல்லது வேறு காரணங்களினால் பாதிக்கப்பட்டாலும் ஏற்படும் நஷ்டத்திற்கு மாநகராட்சி பொறுப்பு ஏற்காது.

10) பண்ணையில் உள்ள மெயின் வாய்க்கால் உப வாய்க்கால் வடிநீர் வாய்கால் மற்றும் சாலைகள் முதலியவைகளை சேதப்படுத்தாமல், சுத்தமாக, பராமரிப்புச் செய்வது ஏலதாரரின் கடமையாகும். இப்பகுதிக்கு ஏலக்கழிவு கொடுக்கப்படமாட்டாது.

11) பூமிக்குள் புதைக்கப்பட்டிருக்கும் குழாய்களுக்கு ஏதாவது உரிம காலத்தில் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு உண்டான நஷ்டத்திற்கு உரிமதாரர் பொறுப்பாவார்.

12) சாக்கடைத் தண்ணீர் பாய்ச்சல் உள்ள நிலங்களில் அல்லது உரிமக்கு கொடுக்கப்பட்ட பிளாட்டுகளில் ஆடு, மாடுகள் மேய்க்கவும் கிணறுகள், தோண்டவும் கூடாது. வைக்கோல் சேர்த்து வைக்கவோ அல்லது புல்பண்ணையில் எவ்வித கட்டிடங்களோ கட்டக்கூடாது.

13) பண்ணையின் நிலைமையும், அங்குள்ள மரம் செடி கீழே புதைக்கப்பட்ட குழாய்கள் வாய்க்கால்கள், குறுக்கு கூறைகள், இவைகளின் நிலைமையையும் பரிசோதித்துப் பார்ப்பதற்கு ஆணையாளர், உதவி ஆணையாளர் (வருவாய்) அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற அலுவலர்களும் தேவையான காலங்களில் நிலங்களில் பிரவேசித்து பார்க்க உரிமை உண்டு, அவர்களுக்குப் பாத்தியப்பட்ட இதர வேலைகளைச் செய்வதற்கும், பிரவேசிக்கவும் உரிமை உண்டு.

14) பண்ணையில் உள்ள மரங்களின் பலனை அனுபவிக்க உரிமதாரருக்கு உரிமை இல்லை.

15) புல் பண்ணையில் புல் பயிர் செய்ய தண்ணீர் விடும் காலங்களில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். தவிர ஏதாவது ஒரு காரணத்தினால் தண்ணீர் வரத் தவறிய காலத்தில் நஷ்ட ஈடு எதுவும் கோரக்கூடாது. மேலும் கழிவுநீர் அயலார் நிலங்களில் பாய்ச்சக்கூடாது.

16) உரிமதாரர் புல் அறுத்துக் கொள்வதற்கும், வண்டல மண் அப்புறப்படுத்தியதற்கும் தினசரி செலவுகளுக்கும் சரியான கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அதனை ஆணையாளர், உதவி ஆணையாளர் (வருவாய்) அல்லது அவர்கள் அதிகாரம் பெற்றவர்கள் கேட்கும் பொழுது கணக்குகளை காண்பிக்கவேண்டும்.

17) உரிம முடிவு காலத்தில் கினியாபுல்லை முழுவதுமாக அறுத்துவிடக்கூடாது 9 அடி உயரமுள்ள புல் தூர்களை நிலத்தில் விட்டுவைக்க வேண்டும். கடைசி 2 மாத காலத்தில் புல் வெட்டுவதற்கும் வண்டல் அகற்றுவதற்கும், அலுவலக முன் அனுமதி பெறவேண்டும்.

18) உரிம முடிவு காலத்தில் பிளாட்டுகளை நல்ல நிலையில் ஒப்படைக்கவேண்டும்.

19) உரிமதாரர் பிளாட்டுகளை உள் குத்தகைக்கு விடக்கூடாது, அவ்வாறு விடப்பட்டு உள்ளதாகத் தெரியவரும்பட்சத்தில் நஷ்ட ஈடு எதுமின்றி உரிம ரத்து செய்யப்படும் என்பதோடு, அன்னாரின் பொறுப்பிலும், செலவிலும் மறு ஏலம் நடத்தப்படும்.

20) எந்தக் காரணத்தைக் கொண்டும், புல்பண்ணை மாநகராட்சிக்குத் தேவைப்படும் பொழுது மூன்று நாட்கள் நோட்டீஸ் கொடுத்து உரிம காலத்தில் உரிமையை ரத்து செய்ய ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அதற்கு நஷ்ட ஈடு எதுவும் கோரக்கூடாது.

21) மேலே கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாக உரிமதாரர் எவ்வித குற்றம் செய்தாலும், உரிம தொகையில் ரூ.100/-க்கு ரூ.10/-க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கவோ அல்லது உரிம ரத்து செய்து மறு ஏலம் நடத்தவோ ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

22) மேற்படி நிபந்தனைகளுக்கு உரிமதாரர் கட்டுப்பட்டு இருக்கிறாரோ இல்லையோ என்பதைத் தீர்மானிக்க ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அவரது தீர்ப்பே முடிவானதாகும்.

23) மாநகராட்சி நிர்வாகம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலை கிலோ ஒன்றுக்கு 0.50 பைசாவுக்கு கூடுதலாக விற்பனை செய்யக்கூடாது. கூடுதல் விலைக்கு விற்பனை செய்ததாக புகார் வரும் பட்சத்தில், உரிமதாரர் மீது நடவடிக்கை எடுக்க ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. உரிம காலத்தில் எவ்வித கட்டண உயர்வும் கோரக்கூடாது.

24) ஏலத்தொகை முழுவதும் செலுத்தி பொறுப்பு ஒப்புக் கொள்ள வேண்டும். ஏலம் உறுதியான தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் முச்சாலிக்கா படிவத்தை அனுசரித்து மற்றும் ஆணையாளர் குறிப்பிடும் நிபந்தனைகளின்படியும் ரூபாய் இருபது மதிப்புள்ள முத்திரைக் காகிதத்தில் உரிமதாரர் ஒப்பந்தப்பத்திரம் எழுதி ஏலம் எடுத்தவர் செலவில் கொடுக்கவேண்டும்.

25) உரிம ஆவணங்கள் எழுதிக் கொடுத்தால் ஒழிய உரிமம் அனுபவிக்க விடப்படமாட்டாது.

26) தமிழ்நாடு குத்தகை சாகுபடியாளர் பாதுகாப்பு சட்டத்தின்படி, எவ்வித உரிமையும் கோரக்கூடாது.

27) ஏலம் எடுக்கப்பட்ட இடம் எந்த நிலையில் உள்ளதோ அந்நிலையில் தான் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

இராஜாஜி சிறுவர் பூங்கா நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் மாநகராட்சியால் அமைக்கப்பட்ட 6 விளையாட்டு சாதனங்கள் வசூல் செய்யும் உரிமம்

கட்டணம் வசூல் செய்யும் விபரம்

இராஜாஜி சிறுவர் பூங்கா நுழைவு கட்டணம் சிறியவருக்கு ரூ.5/-லிருந்து ரூ.10/- ஆகவும், பெரியவருக்கு ரூ.10/-லிருந்து ரூ.20/- ஆகவும் உயர்வு செய்து மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 754 நாள். 24.12.2019ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது .

தனி நிபந்தனைகள்:-

1. ஏற்கனவே மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஷெடியூல் கட்டணத்திற்கு அதிகமாக கட்டணம் வசூலிக்கக்கூடாது.

2. மேற்கண்ட இனத்திற்கான கட்டண விவரங்களை தெளிவாக, நீல நிற அறிவிப்புப்பலகையில் வெள்ளை நிற எழுத்துக்களில் எழுதி வைக்க வேண்டும். பலகை குறைந்தது 5'x3' அடி அளவிலும் எழுத்துக்கள் குறைந்தது 5 inch அளவிலும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பலகையை தற்காலிக அல்லது நிரந்தர மறைப்புகள் கொண்டு மூடக்கூடாது. ஆய்வின் போது அவ்வாறு கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்படும்.

3. விளையாட்டு சாதனங்கள் ஒப்படைக்கப்பட்ட(working condition) நிலையிலேயே ஏலதாரர் மீண்டும் மாநகராட்சி வசம் ஒப்படைக்கவேண்டும்.

4. விளையாட்டு சாதனங்களில் ஏதேனும் பழுதடைந்தால் ஏலதாரர் தனது சொந்த செலவில் சீர் செய்து கொள்ளவேண்டும். தவறும்பட்சத்தில் மாநகராட்சி சரி செய்தால் அன்னாரின் பிணை வைப்புத் தொகையில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

5. மேற்படி பூங்காவில் அனைத்து மின்துய்ப்பு கட்டணங்களையும் உரிமதாரால் செலுத்தப்பட வேண்டும்.

6. ஆணையாளர் அவர்களின் உத்தரவு இல்லாமல் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நிரந்தரமாவது, தற்காலிகமாவது சீர்திருத்தங்களாவது கட்டிடங்களாவது அல்லது கட்டுவதற்கு அனுமதிக்க இயலாது. அவ்வாறு மீறும்பட்சத்தில் மாநகராட்சி சொத்துக்களில் அத்துமீறி பிரவேசித்தாக கருதி சட்டப்படி உள்ள எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

7. பூங்காவிற்கு தேவைப்படும் குடிநீர் வசதி மற்றும் மின் வசதிகளை உரிமதாரர் தன் பொறுப்பில் ஆணையாளர் உத்திரவின் பேரில் மேற்கொள்ளப்படவேண்டும்.

8. வருடந்தோறும் வெளியிடப்படும் பொது ஏல நிபந்தனைகள் அனைத்தும் இவ்வினத்திற்கு பொருந்தும்.

9. விளையாட்டு சாதனங்கள் இயக்கும் பணியாளர்கள் சீருடை அணிய வேண்டும்.

10. பூங்காவில் உள்ள மரங்கள் மாநகராட்சிக்கு சொந்தமானவை என்பதால் மரங்கள் சாய்ந்தால் அவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும். விளையாட்டு சாதனங்களை பயன்படுத்துவோர்க்கு பாதுகாப்பிற்கு இன்சூரன்ஸ் செய்து கொள்ள வேண்டும். விளையாட்டு சாதனங்களின் ஸ்திரத்தன்மைக்கு சான்று பெறவேண்டும்.

11. பூங்காவை சுகாதாரமான முறையிலும் நல்லமுறையிலும் பராமரிப்பு பணிகளை உரிமதாரரே சொந்த செலவில் பராமரித்துக் கொள்ளவேண்டும். (செடிகொடிகள் தினசரி தண்ணீர் பாய்ச்சுதல், குப்பைகளை கூட்டி சுத்தம் செய்து அன்றாடம் உரிமதாரர் பொறுப்பில் அகற்ற வேண்டியது).

12. பூங்காவிற்கு வரும் பொதுமக்களுக்கு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால் உரிமதாரரே முழு பொறுப்பாவார். மாநகராட்சி எவ்வித பொறுப்பும் ஏற்காது.

எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் பொருட்கள் வைப்பறை

<u>தனி நிபந்தனைகள்:-</u>

1. பாதுகாப்பு அறைகளில் வைக்கப்படும் (Cloak Room) பொருள்களில் சிறிய உருப்படி ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.15/- பெரிய உருப்படி ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.20/- என்றும் வசூல் செய்ய வேண்டும். கூடுதல் கட்டணம் வசூல் செய்யக்கூடாது.

2. மாநகராட்சி ஏல விதிகளில் உள்ள கட்டண விபரப்படி இனம் வாரியாக டிக்கெட் அச்சடித்து மைய வருவாய் பிரிவின் மூலம் மாநகராட்சி முத்திரை பெற்று கட்டணம் வசூல் செய்யப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் மாநகராட்சி முத்திரை இல்லாமல் கட்டணம் வசூல் செய்யக்கூடாது. மேற்படி இரசீதுகளில் உரிமதாரர் பெயர் மற்றும் கைபேசி எண் அச்சடிக்கப்படவேண்டும்.

3. மேற்கண்ட இனத்திற்கான கட்டண விவரங்களை தெளிவாக, நீல நிற அறிவிப்புப்பலகையில் வெள்ளை நிற எழுத்துக்களில் எழுதி வைக்கவேண்டும். பலகை குறைந்தது 5'x3' அடி அளவிலும் எழுத்துக்கள் குறைந்தது 5 inch அளவிலும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பலகையை தற்காலிக அல்லது நிரந்தர மறைப்புகள் கொண்டு மூடக்கூடாது. ஆய்வின் போது அவ்வாறு கண்டறியப்பட்டால் அபராதம் விதிக்கப்படும்.

4. பொருள் பாதுகாக்கும் அறைகளை 24 மணி நேரமும் செயல்படுத்தவேண்டும். மேற்படி இடத்தை பொருள் பாதுகாப்பு அறையாக மட்டுமே உபயோகப்படுத்த வேண்டும். இதர காரியங்களுக்கு பயன்படுத்தக்கூடாது. இங்கு உரிமம் பெற்றவர் தனது சொந்தப்பொறுப்பில் கட்டணங்களை வசூலித்துக் கொள்ளவேண்டும். இதற்காக மாநகராட்சியின் உதவியை எவ்வகையிலும் நாடக்கூடாது.

5. பொருள் பாதுகாப்பு அறைகளின் கட்டண வசூல் பணிக்கு தொடர்ச்சியாக வரிசை எண்களிட்ட மூன்று பிரதிகள் கொண்டு ரசீதுகள் உரிமை பெற்றவர் தயார் செய்து மைய வருவாய் பிரிவின் மூலம் மாநகராட்சி முத்திரை பெற்று பயன்படுத்தவேண்டும்.

6. முதல் அசல் பிரதியை பொருளின் சொந்தக்காரரிடம் கொடுக்கவேண்டும். இரண்டாவது பிரதியை பொருளின் மீது ஒட்டவேண்டும். மூன்றாம் பிரதியை ரசீது புத்தகத்திலேயே வைத்திருக்கவேண்டும். பொருட்களை திரும்ப ஒப்படைக்கும்போது அசல் பிரதியை பெற்றுக்கொண்டு அதனை பொருளின் மேல் ஒட்டப்பட்டுள்ள பிரதியும் சரிபார்த்த பின்னர், அதனை அழித்து விட்டு பொருளை உரியவரிடம் ஒப்படைக்கவேண்டும். அசல் பிரதியை மூன்று மாத கால வரை பாதுகாத்து வைத்திருக்கவேண்டும்.

7. மூன்று நாட்களுக்கு மேல் பொருட்களை பாதுகாப்பு அறையில் (Cloak Room) வைக்க உரிமதாரர் அனுமதிக்கக்கூடாது. ஒரு மாத காலத்திற்கு மேல் பொருள் பாதுகாப்பு அறையில் உள்ள பொருட்கள் உரிமையாளரினால் திரும்ப கோரப்படாமல் இருந்தால் அவைகளை கேட்பாரற்ற பொருள்களாக கருதி காவல் நிலையத்தில் உரிமம் பெற்றவரால் ஒப்படைக்கப்படவேண்டும். காவல்துறையினரால் இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கு உரிமதாரர் கட்டுப்பட்டவர் ஆவார். மாநகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பும் ஏற்காது.

8. பொருள் பாதுகாப்பு அறையில் ஒப்படைக்கப்படும் பெட்டி மற்றும் மூட்டை இவற்றின் உள்ளே வைக்கப்பட்டிருக்கும் எந்த பொருளுக்கும் மாநகராட்சி பொறுப்பு எற்காது. மாநகராட்சியும் உரிமம் பெற்றவரும் பொறுப்பு ஏற்க இயலாதென்று ரசீதில் நிபந்தனை அச்சிடப்படவேண்டும். இந்நிபந்தனையின் விபரம் பொதுமக்களுக்கு தெரியும் வகையில் பொருள் பாதுகாப்பு அறையில் மாட்டவேண்டும்.

9. ஆட்சேபணைக்குரிய சாமான்கள் ஏதாகிலும் வைக்கப்பட்டதாக தெரிந்து அதன்பேரில் காவல் துறை அல்லது சுங்க இலாகாவினரால் நேராய்வு செய்யப்பட்டு பறிமுதல் செய்யப்படும் சாமான்களுக்கு மாநகராட்சி பொறுப்பு ஏற்காது. இது சம்பந்தமாக மேற்படி துறையினரால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு உரிமதாரர் கட்டுப்பட்டவராவார். இவ்வகையான சாமான்களுக்கு மாநகராட்சியோ அல்லது உரிமம் பெற்றவரோ பொறுப்பேற்றுக்கொள்ள இயலாது என்று பற்றுச்சீட்டில் நிபந்தனை அச்சிடப்படவேண்டும்.

10. பொருள் பாதுகாப்பு அறைக்கொன்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் மாநகராட்சி அனுமதியின்றி எவ்வித மாறுதல்களும் செய்யக்கூடாது. அறைகளின் முன்புறம் மற்றும் சுற்றுப்புறங்களில் எவ்வித மாறுதல்களும், ஆக்கிரமிப்புகளும் செய்யக்கூடாது.

11. பொருள் பாதுகாப்பு அறைகளுக்கான மின்சாரக்கட்டணத்தை மாதந்தோறும் உரிமம் பெற்றவரே தனது சொந்த பொறுப்பில் செலுத்தவேண்டும்.

12. பொதுமக்கள் நலன் கருதி மாநகராட்சியால் அவ்வப்போது விதிக்கும் நிபந்தனைகள் மற்றும் உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும். மராமத்து அபிவிருத்தி மற்றும் எந்த ஒரு அவசியமான காரணத்திற்காகவும் மாநகராட்சி தற்காலிகமாக பொருள் பாதுகாப்பு அறைகளை மூடி வைக்குமாறு அறிவித்தால் உரிமதாரர் அதற்கு கட்டுப்படவேண்டும். இதற்காக நஷ்ட ஈடு எதுவும் கோரக்கூடாது.

13. பொருள் பாதுகாப்பு அறைகளை எந்த நேரத்தில் எந்த ஒரு காரணத்திற்காகவும் ஆய்வு செய்ய மாநகராட்சி அலுவலர்களுக்கு அதிகாரம் உண்டு. இதனை ஆட்சேபிக்க உரிமதாரருக்கு உரிமையில்லை.

14. பொருள் பாதுகாப்பு அறையில் மாநகராட்சி அமைத்துள்ள அலமாரிகள், மின் சாதனங்கள் மற்றும் இதர பொருட்களுக்கு எவ்வித சேதாரமும் இல்லாமல் பாதுகாத்து, அவைகளை மீண்டும் உரிமதாரர் மாநகராட்சி வசம் ஒப்படைக்கவேண்டும்.

15. பொருள் பாதுகாப்பு அறையில் வைக்கப்படும் பொருட்களுக்கு மாநகராட்சி நிர்ணயித்துள்ளவாறு கட்டணங்களை வசூலித்து கொள்ளும் உரிமை தவிர மற்ற எந்த ஒரு உரிமையும் உரிமம் பெற்றவருக்கு கிடையாது.

16. பொது வேலை நிறுத்தம், பொது ஊரடங்கு இயற்கை பேரிடர்கள் போன்ற நிகழ்வுகள் நேரும் போது, உரிமம் பெற்றவர் எந்தவொரு நஷ்ட ஈடு கோரக்கூடாது.

17. பாதுகாப்பு காரணம் கருதி காவல்துறையினரால் தெரிவிக்கப்படும் “கண்காணிப்பு காமிரா(CCTV)” ஏற்பாடுகளை உரிமதாரர் தனது சொந்தப்பொறுப்பில் செய்து கொள்ள வேண்டும். மாநகராட்சி இதற்கு எவ்விதத்திலும் பொறுப்பு ஏற்காது.